விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 29 வியாழக்கிழமை (11.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 054

முல்லை.குருந்தூர்மலை அகழ்வாராய்ச்சியில் சிவலிங்கத்தை ஒத்த உருவம் மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட குருந்தூர் மலையில் தொல்லியல் திணைகளத்தினர் மேற்கொண்டுவரும் அகழாய்வு நடவடிக்கையில் இந்தியாவின் பல்லவர் காலத்து (கி.பி. 275-கி.பி. 897) பயன்பாட்டு வடிவமைப்புக்களில் ஒன்றான தாராலிங்கம் எனப்படுகின்ற அமைப்பினை உடைய உருவச் சிலை ஒன்றும் அது பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்ற கட்டட இடிபாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த சிலையுடன் செங்கற்கள் அல்லது அதனை 19

இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் இல்லை

நீதியமைச்சரும் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 19

மீசாலையில் இளைஞன் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

மீசாலை பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று புதன்கிழமை காலை அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் மீசாலை 19

இலங்கைச் சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை

பாராளுமன்றில் பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் பிரதமரிடம் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். *(03ஆம் பக்கம் பார்க்க)*

5 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி நேற்று மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறு 19

தேசிய பாதுகாப்பு தொடர்பில் எவரும் கேள்வி கேட்க முடியாது

அமைச்சர் சரத் வீரசேகர

03ஆம் பக்கம் பார்க்க

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 97 சதவீத காணிகள் விடுவிப்பு

பாராளுமன்றில் அமைச்சர் சரத் வீரசேகர

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண காணிகளில் 97 சதவீதமானவை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ராஜமாணிக்கம் முன்வைத்த கேள்விக்கு 19

வடக்கில் 21 பேருக்கு கொரோனாத் தொற்று

இருவர் பல்கலை மாணவர்கள் ஐவர் வங்கி ஊழியர்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 21 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள் 19

கொரோனாவால் உயிரிழப்பவர்களை

அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்படும்

சபையில் பிரதமர் மகிந்த

7ஆம் பக்கம் பார்க்க

ஜெனிவாவில் இலங்கை விவகாரத்தை விரிவாக ஆராய வேண்டும்

சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின்போது இலங்கையில் இடம்பெற்ற திட்டமிட்ட குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், வலிந்து காணாமலாக்கப்படல், வலுவிழந்துள்ள சட்டத்தின் ஆட்சி உள் 19

இலங்கையில் நேற்றும் 955 பேருக்கு தொற்று

72 ஆயிரத்தைத் தாண்டிய மொத்த பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நேற்றும் 955 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற் 19

விக்னேஸ்வரனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

அமைச்சர் சரத் வீரசேகர

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் போன்றோருக்கு எதிராக எதிர்வரும் நாட் 19

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை

மக்கள் பேரெழுச்சி இயக்கம் நேற்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி 19

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் நேற்று நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்ல தீர்மானித்துள்ளனர்.

இலங்கை ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாம் இன்று (நேற்று) நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கையொன்றுக்குச் செல்ல தீர்மானித்துள்ளோம். ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரயில்வே திணைக்களத்தில் காணப்படும் ஊழியர்கள் பற்றாக்குறையினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தில் இவ்வாறான வெற்றிடங்கள் காணப்பட்டால் இன்னும் இரண்டு மாதங்களில் இது கவிழ்ந்துவிடும் என்றார். (ம)

SRI VIDYA TEMPLE SOCIETY & ASHTANKA YOGA MANDIR

are Pleased to Present

SACRED RITES AND RITUALS OF SANATANA DHARMA

FEATURING SRI CHAITANYANANDA (HARAN AIYA)

This 3-month, weekly learning series will explore a variety of topics from Sanātana Dharma. It will entail learning sessions led by Haran Aiyā and integrate practical demonstrations by Senior disciples from the Śrī Vidyā Temple. We will conclude each learning session with 15 minutes of yoga.

Sample Topics:

- *Understanding the importance of our duties to our ancestors*
- *Performing sacred rites and rituals*
- *How planets influence our lives*
- *Practices that support us during times of difficulty*

Timings:

- North America: Weekly on Fridays 7:30- 8:45 PM ET, between February 12, 2021 - April 30 2021
- Sri Lanka and India: Weekly on Saturdays 6:00 - 7:15 AM IST, between February 13, 2021 - May 1 2021

Language: English

Venue: Virtual - www.srividya.org/ayutube

Register at: www.srividya.org/aym-lectures

All are welcome. Due to the nature of the subject matter, the workshop is recommended for individuals 9 years of age and over.

Haran Aiyā is the founder and chief priest of the Śrī Vidyā Temple, a "Teaching Temple" that makes the practices of Śrī Vidyā and Śaiva Siddhānta available to all sincere seekers. Aiyā is a world-renowned speaker who has received numerous awards for his dedication to spreading the divine knowledge of Sanātana Dharma for the benefit of all devotees.

SRI VIDYA TEMPLE (ROCHESTER, NY)
WWW.SRIVIDYA.ORG
416.628.3786 | 585.533.1970
INFO@SRIVIDYA.ORG

ASHTANKA YOGA MANDIR (SRI LANKA)
WWW.YOGA.LK
+94 777 274859
AYM.LANKA@GMAIL.COM

கண்ணீர் அஞ்சலி

திருமதி
அன்ரன் கிறிஸ்ரபெல் அனோஜா
[Teacher (S.L.T.S- I)]

எமது நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. F.X. அன்ரன் அவர்களின் அன்புத் துணைவியாரின் மரணச் செய்தி கேட்டு பெருந்துயர் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 25.06.1965

இறப்பு 09.02.2021

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி - கோண்டாவில்

கண்ணீர்க் காணிக்கை

நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து சென்றது பேரழிவாகக் கருதப்பட்டது. அவர்களே அமைதியாய் இளைப்பாறுகிறார்கள். (சாலமோனின் ஞானம் - 3:1a,3i)

தோற்றம் 25 . 06 . 1965

மறைவு 09 . 02 . 2021

திருமதி
அன்ரன் கிறிஸ்ரபெல் அனோஜா
[Teacher (S.L.T.S- I)]

அன்புறு இல்லத்தரசியாய் வாழ்ந்தீர்
ஆசிரியப் பணிக்காய் உம்மை அர்ப்பணித்தீர்
இறையேசுவின் திருமறையை
இன்முகத்தோடு கற்பித்தீர் - உடன்
பணி செய்யும் எம்முடனே
தோழமையாய் கை கொடுத்தீர்.
அன்பும் பண்பும் நட்பும் நன்றியும்
மென்மையும் இனிமையும் உம்மில் கண்டோம்.
மண்ணக வாழ்வின் வேரறுத்து
விண்ணக வாழ்விற்காய் நீர்
விரைந்திட்ட செய்தி கேட்டு
கலங்கி நிற்கின்றோம். நீர்
முடிவில்லா பேரின்ப வீட்டில்
நிலைவாழ்வைப் பெற்றிட
விழிநீர் சொரிந்து வேண்டுகின்றோம் இறைவனிடம்!

கிறிஸ்தவ ஆசிரியர்கள்
(யாழ்ப்பாணம் கல்வி வலயம்)

மரண அறிவித்தல்

பிறப்பு 25 - 06 - 1965

இறப்பு 09 - 02 - 2021

திருமதி கிறிஸ்ரபெல் அனோஜா அன்ரன்

(ஆசிரியை - யா/ வேம்படி மகளிர் கல்லூரி, முன்னாள் ஆசிரியை - யா/ திருக்குடும்ப கன்னியர் மடம், யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்ரபெல் அனோஜா அன்ரன் நேற்று முன்தினம் (09.02.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லோஸ் - லூர்ட்ஸ்மேரி புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பிரான்சிஸ் சேவியர் - பிலோமினா நவரஞ்சிதம் தம்பதியரின் அன்பு மருமகளும் எப். எக்ஸ் அன்ரனின் (கோட்டக் கல்விப் பணிப்பாளர் - நல்லூர்) அன்பு மனைவியும் நிக்கலின் (இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம் - பேராதனைப் பல்கலைக்கழகம்), மாறியோ (ஆர்பிக்கோ இன்சூரன்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் லொயிட் (கனடா), கொஸ்கா (கனடா), அருட்பணி நெவில் ஞானராஜ் (அவுஸ்திரேலியா), யூடிற் (கனடா), மெல்வின் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருட்பணி மரியஹெலன் ஞானேந்திரனின் உடன்பிறவாச் சகோதரியும் எமா, டொறின், பிரதீபா, றஞ்சினி, குபேரன், றஞ்சன், கமலா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற அருட்சகோதரி போலின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (11.02.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் (O.L.R) ஒப்புக் கொடுக்கப்பட்டு அங்கிருந்து மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய சேமக்காலைக்கு திருவுடல் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1398)

37/7, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். 077 691 3468

தகவல்:- எப். எக்ஸ் அன்ரன் (கணவர்)

தமிழ் அரசியல் கைதிகள் என்று எவருமில்லை

சபையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

அரசியல் கைதிகள் என யாரும் இலங்கை சிறைச் சாலைகளில் இல்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் இரா.சாணக்கியன், நாட்டில் சிறைச்சாலைகளில் சிறைக்கைதிகள் எத்தனைபேர் இருக்கின்றனர்?, நாட்டில் இருக்கும் இராணுவ முகாம்கள், சிறைக்கைதிகளை விடுவிக்க இன்னும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மற்றும் பாதுகாப்பு பிரிவினரிடமிருக்கும் தனியாருக்கு சொந்தமான காணிகளின் பிரமாணம் தொடர்பாக கேட்டதற்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், இலங்கையின் தண்டனைக் கோவைச் சட்டம் அல்லது நாட்டில் செயற்பட்டுவரும் வேறு எந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கும் விளக்கமறியல் கைதிகள் அல்லது சிறைக்கைதிகளில் அரசியல் கைதிகள் என யாரும் சிறைச்சாலைகளில் இல்லை.

அத்துடன் மாவட்ட மட்டத்தில் இராணுவத்தினருக்கு இருக்கும் காணி அளவு தொடர்பில், தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு பதில் வழங்க முடியாது என பாதுகாப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என அவர் தெரிவித்தார். (நி-4)

தேசிய பாதுகாப்பு தொடர்பில் எவரும் கேள்வி கேட்க முடியாது

பாராளுமன்றில் அமைச்சர் வீரசேகர காட்டம்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு தொடர்பில் கேள்வி கேட்க எவருக்கும் உரிமையில்லை என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக் காலை பாராளுமன்றம் கூடியபோது வடக்கில் பாரிய அளவு காணிகள் இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளதாக தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சரத் வீரசேகர, தேசிய பாதுகாப்பு குறித்து கேள்வி கேட்க எவருக்கும் உரிமையில்லை என்று குறிப்பிட்டதுடன், வடக்கு-கிழக்கு பகுதிகளில் 96 சதவீத காணிகள் இதுவரை விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார். (நி-4)

சுமந்திரனுக்கான விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பு நீக்கப்பட்டமை தொடர்பில் வீரசேகர-பொன்சேகா கருத்து மோதல்

(கொழும்பு)

நீதிமன்ற உத்தரவை மீறியமை காரணமாகவே எம்.ஏ. சுமந்திரனுக்கான விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பு நீக்கப்பட்டது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் விசேட அதிரடிப் படையினரை வெளியில் நிறுத்திவிட்டு, வீட்டுக்குள் சென்று சுமந்திரன், பயங்கரவாதிகளுக்கு அஞ்சலி செலுத்தியதாகவும் இந்த நிகழ்வின்போதே அவருக்கு பாதுகாப்பை நீக்குவது குறித்து தீர்மானிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் நீதிமன்ற தடை விதிக்கப்பட்ட போராட்டங்களில் பங்கேற்றதுடன் நீதிமன்ற உத்தரவையும் மீறியிருந்த சுமந்திரனுக்கு விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பினை தொடர்ந்தும் வழங்க முடியாது என்றும் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இதேவேளை சபையில் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பி உரையாற்றிய சரத் பொன்சேகா, நீதிமன்ற தடையுத்தரவை மீறிய குற்றச்சாட்டில் பாராளுமன்ற உறுப்பினருக்கு பாதுகாப்பை நீக்குவதென்பது சரியான காரணமல்ல என குறிப்பிட்டார்.

பயங்கரவாதிகளுக்கு அஞ்சலி செலுத்தியமைக்காக பாதுகாப்பை நீக்கியதாக கூறினால், பொதுமக்கள், பொலிஸார் மற்றும்இராணுவத்தினரை கொலை செய்த குற்றச்சாட்டுக்கள் உள்ள கருணா அம்மான், பிள்ளையான் போன்றோருக்கு பாதுகாப்பு வழங்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

தன்னை சுற்றி அதிகளவிலான இராணுவத்தினரை பாதுகாப்பிற்காக வைத்திருக்கும் பிள்ளையானை பார்க்கும் போது தான் வெட்கப்படுவதாகவும் சரத் பொன்சேகா குற்றம் சாட்டினார்.

இப்படியான நிலையில் சுமந்திரனுக்கான பாதுகாப்பினை நீக்கியதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் சரத் பொன்சேகா தெரிவித்தார். (நி-4)

நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை ரஞ்சன் பாராளுமன்றம் வரமுடியாது

(கொழும்பு)

நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கும் வரை ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்திற்கு அழைக்கப்பட மாட்டார் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பதில் வழங்கும் போதே சபாநாயகர் இதனை குறிப்பிட்டார்.

ரஞ்சன் ராமநாயக்க மீதான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனினும், அவரது பதவியை தொடர்ந்தும் பேணுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, நீதிமன்ற தீர்ப்பு கிடைத்தவுடன், அடுத்த கட்ட தீர்மானம் அறிவிக்கப்படும் என சபாநாயகர் தெரிவித்தார்.

இதன்போது, சர்வதேச சட்டத்தில் எந்தவொரு தண்டனைக்கும் மேன்முறையீடு செய்ய முடியும் என கூறப்பட்டுள்ளது. எனவே, இவ்விடயம் தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும். ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற பதவியை பேணுவது தொடர்பான தீர்மானத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானிக்கும். அதுவரை, பிரேமலால் ஜயசேகர பாராளுமன்றத்திற்கு வருவதற்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமையை ரஞ்சன் ராமநாயக்கவிற்கும் வழங்க வேண்டும் என சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டார்.

எனினும், நீதிமன்ற தீர்ப்பின் பின்னரே பிரேமலால் ஜயசேகர பாராளுமன்றத்திற்கு வருவதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக சபாநாயகர் சுட்டிக்காட்டினார். (நி-4)

மேல் மாகாணப் பாடசாலைகள் இம்மாதம் திறக்கப்படமாட்டாது

கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மேல்மாகாணப் பாடசாலைகளை எதிர்வரும் 15 ஆம் திகதி திறக்க மேற்கொண்டிருந்த தீர்மானம் இரத்துச் செய்யப்படுவதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணம்உட்பட நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் எதிர்வரும் 15 ஆம் திகதி கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்படும் என அமைச்சர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே மேல் மாகாணப் பாடசாலைகளை எதிர் வரும் 15 ஆம் திகதி திறக்க மேற்கொண்டிருந்த தீர்மானம் இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

இலங்கை-இந்திய விமானசேவை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடுமையான சுகாதார வழிகாட்டுதலின் கீழ் விமான சேவைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையில் விமான பயணத்தின் போது எயார் பபிள் (air bubble) என்று அழைக்கப்படும் நடவடிக்கையின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான விமான போக்குவரத்துக்கள் இயங்கும் என அவர் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயம் இது தொடர்பான திட்டங்களை வெளிவிவகார மற்றும் சுற்றுலா அமைச்சகங்களுக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

‘கவலை யாருக்கு இல்ல அத கடந்து போகனும் மெல்ல...’

நம்பிக்கை ஊட்டுகிறார் ஹோலி

“அடுத்து வரும் போட்டிகளில் இங்கிலாந்துக்கு சவாலாக இருப்போம்,” என, ஹோலி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சென்னையில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி 227 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்திடம் தோல்விய டைந்தது.

இதுகுறித்து இந்திய அணித் தலைவர் ஹோலி கூறுகையில்,

“இங்கிலாந்து அணிக்கு நாங்கள் போதிய நெருக்கடி தரவில்லை. எங்க எது முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டம், இங்கிலாந்து அணிக்கு சாதகமாக மாறியது.

தவிர எங்களை விட சிறப்பான முறையில் அவர்கள் தயாராகி வந்துள்ளனர். பந்துவீச்சில் சற்று வித்தியாசம் இருக்க வேண்டும் என விரும்பினோம். எந்தெந்த வீரர்களுடன் விளையாட வேண்டும் என ஏற்கெனவே தெளிவான மனநிலையில் இருந்தோம்.

குல்தீப்பை அணியில் சேர்க்காதது குறித்து வருத்தம் எதுவும் இல்லை. மற்றபடி தோல்வி, தவறுகளை ஏற்றுக் கொள்கிறோம். அடுத்த மூன்று டெஸ்டில் கடும் சவால் கொடுப்போம்,” என்றார்.

பந்து சரியில்லை

டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவில் எஸ்.ஜி., (உள்ளூர் தயாரிப்பு), அவுஸ்திரேலியாவில் ‘கூக்கபுரா’, இங்கிலாந்தில் ‘டியூக்’ வகை பந்துகள் பயன்படுத்தப்படும். சென்னை டெஸ்டில் எஸ்.ஜி., வகை பந்து பயன்படுத்தப்பட்டது. இது, விரைவில் உறுதித் தன்மையை இழந்து விடும்.

சென்னை டெஸ்டில் முதல் 40 ஓவர்களில் பந்தினை தையல் பிரிந்து விட்டது. இதைப் பிடித்து பந்தை சுழற்றுவது சிரமமாக இருந்தது. 80 ஓவருக்குப் பின் தான் புதிய பந்து தரப்படும் என்பதால் வேறு வழியில்லாத நிலையில், சேதமான பந்துடன் நமது பந்துவீச்சாளர்கள் போராடினர்.

இதுகுறித்து அஷ்வின் கூறுகையில்,“எஸ்.ஜி., பந்து களின் தையல் இது போல பிரிந்து இதற்கு முன் பார்த்தது இல்லை. முதல் இரு நாட் களில் ஆடுகளம் எவ்வளவு வலிமையாக இருந்தது என்பதற்கு இது தான் சான்று. இரண்டாவது இன்னிங்சில் 35-40 ஓவர்களில் தையல் வெளியே வந்து விட்டது,” என்றார்.

இந்திய அணித் தலைவர் ஹோலி கூறுகையில்.“எஸ்.ஜி., பந்து எகளின் தரம் சிறப்பாக இல்லை. 60 ஓவர்களில் பந்து முற்றிலும் சேதமாகி விட்டது. தோல்விக்கு இதை காரணமாக கூறவில்லை. இங்கிலாந்து சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றது,” என்றார்.

விராட் ஹோலி

ஜோ ரூட் மகிழ்ச்சி

இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட் கூறுகையில்,

“இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு இல்லாமல் செய்ய வேண்டும் என்று விரும்பினோம். ரன் ரேட் அதிகமாக சென்றாலும் அதுகுறித்த கவலை பந்துவீச்சாளர்களுக்கு இருக்கக் கூடாது என முடிவு செய்தோம். இதனால் தான் 400 ஓட்டங்களுக்கும் மேல் இலக்கு நிர்ணயித்தோம். அறிமுகமற்ற ஆடுகளத்தில் எதிரணியின் 20 விக்கெட்டுகளையும் எங்கள் பவுலர்கள் வீழ்த்தியது மகிழ்ச்சி தருகிறது,” என்றார்.

கவாஸ்கர் ஆதரவு

இந்திய அணி ‘ஜாம்பவான்’ கவாஸ்கர் கூறுகையில், “சென்னை டெஸ்டில் நாணயச் சுழற்சியில் முக்கிய பங்கு வகித்தது. நாணயச்சுழற்சியில் வென்ற துடுப்பாட்டத்தை தேரவு செய்த இங்கிலாந்து 578 ஓட்டங்களைக் குவித்து நெருக்கடி கொடுத்தது. இந்திய அணி சிறப்பாக விளையாடவில்லை. இருப்பினும் ஹோலி ‘பார்மிற்கு’ திரும்பியது, ரிஷாப் பன்ட் வேகமான ஓட்டக் குவிப்பு என இந்திய அணிக்கு சாதகமான விடயங்கள் நடந்துள்ளன,” என்றார்.

இப்ராகிமோவிச் ‘500’

கழக கால்பந்தில் கலக்கல்

கழக கால்பந்தில் 500 கோல்கள் அடித்து அசத்தினார் இப்ராகி மோவிச்.

சுவீடன் கால்பந்து நட்சத்திரம் இப்ராகிமோவிச் (வயது-39). தற்போது இத்தாலியில் நடக்கும் ‘சீரி ஏ’ தொடரில் ஏ.சி.மிலன் கழக அணிக்காக விளையாடுகிறார்.

இதன் லீக் போட்டியில் ஏ.சி.மிலன் அணி 4-0 என்ற கோல் கணக்கில் குரோடன் அணியை வீழ்த்தியது. இதில் இப்ராகிமோவிச் இரண்டு கோல்கள் அடித்தார்.

இதையடுத்து கழக கால்பந்து அரங்கில் 500 கோல்கள் அடித்த 11ஆவது வீரரானார். 825ஆவது போட்டியில் இந்த மைல்கல்லை எட்டினார்.

பார்சிலோனா, இன்டர் மிலன், யுவண்டஸ் உள்ளிட்ட அணிகளுக்காக மொத்தம் 395 கோல்கள் அடித்த இப்ராகிமோவிச், ஐரோப்பிய போட்டி களில் 57, டொமஸ்டிக் போட்டிகளில் 48 கோல்கள் அடித்துள்ளார். தவிர சுவீடன் அணிக்காக 62 கோல் அடித்தார்.

தற்போது விளையாடிக் கொண்டிருக்கும் வீரர் களில் 500 மற்றும் அதற்கும் கோல் அடித்த வீரர்களில் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்சி (650), போர்த்துக்கலின் ரொனால்டோவுக்கு (661) அடுத்த இடம் பெற்றார் இப்ராகிமோவிச்.

இப்ராகிமோவிச்

ஆஸி ஓபன்

மூன்றாவது சுற்றில் ஜோகோவிச்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் 3ஆவது சுற்றுக்கு செர்பியாவின் ஜோகோவிச், ஆஸ்திரியாவின் டொமினிக் தியம், அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் உள்ளிட்டோர் முன்னேறினர்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடப்பு ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் நடக்கிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் 2வது சுற்றில் ‘நடப்பு சம்பியன்’ செர்பியாவின் நோவக் ஜோகோவிச், அமெரிக்காவின் பிரான் செஸ் தியாபோ மோதினர். உலகின் ‘நம் பர் 1’ ஜோகோவிச் 6-3, 6-7, 7-6, 6-3 என்ற கணக்கில் போராடி வெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில் ஆஸ்திரியாவின் டொமினிக் தியம் 6-4, 6-0, 6-2 என்ற நேர் செட் கணக்கில் ஜேர்மனியின் டொமினிக் கோப் பெரை தோற்கடித்தார். ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரேவ் 7-5, 6-4, 6-3 என, அமெரிக்கா வின் மேக்சிம் கிரேசியை வென்றார்.

செரினா அபாரம்

பெண்கள் ஒற்றையர் 2ஆவது சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், செர்பியாவின் நினா ஸ்டோஜனோவிச் மோதினர். அபாரமாக ஆடிய செரினா 6-3, 6-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில் ஜப்பானின் நவோமி ஒசாகா 6-2, 6-3 என, பிரான்சின் கரோலின் கார்சியாவை வீழ்த்தினார். ருமேனியாவின் சிமோனா ஹாலெப் 4-6, 6-4, 7-5 என, அவுஸ்திரேலியாவின் அஜ்லா டாம்ல்ஜனோவிக்கை தோற்கடித்தார்.

தியாபேவுடனான 2ஆம் சுற்று ஆட்டமொன்றில் ஜோகோவிச்

மணல்காடு மணல் மேடுகளை பாதுகாக்க நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மணல்காடு மணல் மேடுகளை, கடலோர பாது காப்புத் திணைக்களத்தின் கீழ், பாதுகாக்கப்பட்ட பகுதியாகப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், மக்களின் எதிர் பார்ப்புகளுக்கு ஏற்ப அரசாங்க த்தின் அபிவிருத்தித் திட் டங்களை நிறைவுசெய்ய நடவடிக்கை எடுப்பது குறித்து பிரத மர் மகிந்த ராஜபக்ஷ கலந்துரை யாடியுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீட மைப்பு அமைச்சில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முன் னேற்ற மறுஆய்வுக் கூட் டம் பிரத மர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, காலத்துடன் போராடி ஐந்து வருட காலத்தில் மக் களின் அபிலாசைகளை நிறைவே ற்ற நாங்கள் கடுமையாக உழைக்க வேண்டியேற்படும் என பிரதானிக ளிடம் பிரதமர் வலியுறுத்தினார்.

அவ்வாறு செய்யத் தேவை யான பலமும் அனுபவமும் கொண்ட அரச அதிகாரிகள் குழு தங்களிடம் உள்ளது எனத் தெரி வித்த அவர், வளர்ச்சித் திட்டங் கள் தொடர்பாக எழக் கூடிய எந்த வொரு பிரச்சினைகளையும் தீர் க்க தனிப்பட்ட முறையில் தலை யிடுவதாகவும் தெரிவித்தார்.

மேலும், நகர அபிவிருத்தி, கரையோரக் கழிவுப்பொருள் அகற்றல் மற்றும் சமுதாய தாய் மைப்படுத்தல் இராஜாங்க அமை ச்சிற்குச் சொந்தமான மற்றும் அவற்றில் செயற்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பாரிய அபி விருத்தித் திட்டங்களுக்கு மேல திகமாக, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத் தின் மூலம் மூன்று மாவட்ட ங்களில் சிறு குளங்களைப் புனரமைத்தல் மற்றும் கொழு ம்பைப் போல் 21 மாவட்டங் களில் உடற்பயிற்சிக்கான இட ங்கள் மற்றும் சிறுவர் பூங் காக்களுடன் 21 பூங்காக்களை நிறுவ எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கடலரிப் பைத் தடுக்க நாடு முழுவதும் 22 கடலோர வேலைத் தள ங்கள் நிறுவப்பட்டுள்ளன.

சுற்றுலாத்துறையைக் கரு த்தில் கொண்டு பொத்துவில் மற்றும் அருகம்பே பகுதிகளின் கடலரிப்புப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க கடலோர பாது காப்புத் திணைக்களம் நட வடிக்கை எடுத்து வருகிறது.

மேலும், யாழ்ப்பாணம் மணல்காடு மணல் மேடு களை இந்த திணைக்களத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட பகுதியாக பாதுகாக்கவும் எதிர்பார்க்கப்படு கிறது. பிரதான வீதிகளிலிருந்து கடற்கரையை அண்மித்த வீதி களுக்கு மக்களுக்கு காணப் படும் அசௌகரியத்தை தவிர்ப் பதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். கடலோரப் பகுதியில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை அகற்றுமாறு பிரதமர் அதிகாரிகளுக்கு அறி வுறுத்தினார். (நி-4)

கண்ணீர் அஞ்சலி

நல்லூர்க் கோட்ட கல்விப் பணிப்பாளர்
திரு.F.X.அன்ரன் அவர்களின் பாசமிகு துணைவியார்

அமரர். கிறிஸ்ரபெல்
அனோஜா அன்ரன்
(ஆசிரியை-S.L.T.S.I)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(5616)

பாடசாலைச் சமூகம்,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

வலம்புரி 021 221 7603, 077 567 1532

மரண அறிவித்தல்

திருமதி.இரத்தினம் செல்லம்மா

தோற்றம்:-1937.02.27
மறைவு:-2021.02.10

ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாக வும் நாச்சிமார் கோவிலடி யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.இரத்தினம் செல்லம்மா அவர்கள் 10.02.2021 (புதன்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின னக்குட்டி யோகம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சீனியர் பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், கணேசன் (வல்வெட் டித்துறை), சாந்தா (ஜேர்மனி), காலஞ்சென்ற கலா, வசந்தி (கனடா), மகேசன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சபேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராணி (வல்வெட்டித்துறை), பாலசிங்கம் (ஜேர்மனி), லோகராஜா (கனடா), மஞ்சுளா (லண்டன்), தாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, பொன்னுத்துரை, ஐயாத்துரை மற்றும் பாக்கியம், பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பெறாமக்களின் பெரியம்மாவும், பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.02.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

612, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்
077 176 1007

(5611)

கண்ணீர் அஞ்சலி

நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர்
திரு.F.X.அன்ரன் அவர்களின் அன்பு மனைவி

திருமதி.கிறிஸ்ரபெல்
அனோஜா அன்ரன்
(ஆசிரியை-யா/வேம்படி மகளிர் கல்லூரி)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.
அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(இ)

சேர்.பொன்.இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கலட்டி மெ.மி.த.க.பாடசாலை.

கண்ணீர் அஞ்சலி

நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர்
திரு.F.X.அன்ரன்
அவர்களின் துணைவியார்

திருமதி.கிறிஸ்ரபெல்
அனோஜா அன்ரன்
(வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியர்)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்வதுடன் இவருக்கு இறைவன் நித்திய இளைப்பாற்றை கொடுக்க இறைவனைப் பிரார்த்தனை செய்கிறோம்.

(C-1400)

நல்லூர் கோட்ட அதிபர்கள், நல்லூர்.

மக்களின் உரிமைக்கான குரல் பேரணியில் ஓங்கி ஒலித்துள்ளது

(யாழ்ப்பாணம்)

அகிம்சை வழியில் மக்களின் உரிமைக்கான குரலாக ஓங்கி ஒலித்தது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி என பேரணியின் வடமாகாண இணைப்பாளா எஸ்.சீ.சீ. இளங்கோவன் தெரிவித் துள்ளார்.

தமிழர்களும், முஸ்லிம் களும் ஒன்றிணைந்து வட க்கு- கிழக்கு சிவில் சமூகத்தின் ஒருங்கிணைப்பில் சர்வமதப் பிரமுகர்களின் ஆசிர்வாதம் மற்றும் பங்களிப்புடன் வடக்கு-கிழக்கு சிவில் சமூக அமைப் புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு தரப்பினரின் ஒத்து ழைப்புடன் பொத்துவில் தொடக் கம் பொலிகண்டி வரையான பேரணியை நிறைவு செய்து உள்ளோம்.

அகிம்சை வழியில் மக் களின் உரிமைக்கான குரலாக இந்தப் பேரணி ஓங்கி ஒலித் துள்ளது என பேரணியின் வடமாகாண இணைப்பாளர் எஸ்.சீ.சீ. இளங்கோவன் தெரி வித்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கை யில்,

கடந்த 3 ஆம் திகதி பொத்து விலிலிருந்து புறப்பட்டு வட க்கு-கிழக்கின் தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து பாரிய எழுச்சியுடன் அகிம்சை வழி யில் மக்களின் உரிமைக்கான இந்த பேரணியில் அணி வகுத் தனர்.

இந்தப் பேரணியின் ஊடாக இலங்கை அரசின் அடக்கு முறை நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களின் எதிர்ப்பி னையும் பதிவு செய்துள் ளோம்.

இந்த பேரணியை ஒழுங்கு செய்ய துணை நின்று பங் களிப்புச் செய்து பேரணியில் பங்கேற்ற அனைவருக்கும் வடக்கு- கிழக்கு சிவில் சமூ கத்தின் சார்பாகவும், வடக்கு மாகாணப் பேரணி இணைப்புச் செயற்பாட்டுக் குழுவின் சார் பாகவும் நன்றியைத் தெரி வித்துக் கொள்கின்றோம்.

இந்தப் பேரணி குறித்து சிறந்த முறையில் செய்திகளை வெளியிட்டு மக்களின் ஒத்து ழைப்பினை பெற்றுக் கொடுத் துடன், பேரணி தொடர்பான செய்திகளை உடனுக்குடன் வெளியிட்ட அனைத்து ஊடக ங்களுக்கும் நன்றியைத் தெரி வித்துக் கொள்கின்றோம்..

இப்பேரணியில் கலந்து கொண்ட மக்களின் உணர்வு களுக்கு மதிப்பளித்துப் பேரணி யின் நிறைவில் ஏற்பட்ட தவறு கள் மற்றும் குறைபாடுகளால் இந்தப் பேரணி ஊடாக ஏற்பட்ட மக்கள் எழுச்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என அவர் மேலும் தெரிவித்தார். (4-18)

ஆன்மிக சொற்பொழிவு

(குப்பிழான்)

ஊர்காவற்றுறை நாரந் தனை வடக்கு பண்டாரப்புலம் திருப்பதியில் எழுந்தருளியி ருக்கும் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் அபிராமிப் பட்டர் குருபூசையை முன்னிட்டு இன்று 11 ஆம் திகதி வியா ழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் ஆலயப் பிர தான மண்டபத்தில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் திருவருள் வாச கர் சைவப்புலவர் கா.கமலநா தன் "தமனியக் காவினில் தங்கு வரே" எனும் தலைப்பில் சொற் பொழிவாற்றுவார். (5-4-18)

கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல் லைக்குள் முன்னெடுக்கப்பட்ட மலக் கழிவுகளை உரமாக்கும் தொழிற் சாலையின் செயற் பாடுகளை தொடர்ந்து முன் னெடுக்குமாறு சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சி பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே குறித்த கோரிக்கையை முன்வைத்தனர். இது தொட ர்பாக அவர்கள் மேலும் தெரி விக்கையில்,

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் கடந்த சில வருடங்களுக்கு முன்பாக மாவ ட்ட செயலகத்தால் பாரிய நிதி ஒதுக்கீட்டில் மலக் கழிவுகளை உரமாக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டது. அதன் கட்டுமானப் பணிகள் முடிவ டைந்த நிலையில் காணப் படுகிறது.

இருப்பினும் உரிய இயந் திரங்கள் பொருத்தப்பட்டு திட் டம் ஆரம்பிக்கப்படாமல் காணப்படுகிறது. குறித்த திட் டத்தை வேறு நிதி மூலங்கள் ஊடாக முன்னெடுக்கவும் நகர சபைக்கு அனுமதி வழங்கப் படவில்லை. மலக்கழிவுகளை அகற்றுதல் மற்றும் அதனை கொட்டுவதற்கான இடத்தினை தேர்ந்தெ டுத்தல் தொடர்பில் உள்ளூ ராட்சி மன்றங்கள் பாரிய சவால்களை எதிர் கொண்டு வரும் நிலையில் இவ்வாறான தொழிற்சாலை கள் நிறுவப்பட வேண்டியது மிக அவசியம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.(5-4-30)



இளவாலை பொலிஸ் நிலைய பிரி விற்குட்பட்ட சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலை மையில் நடைபெற்றது மேற்படி கூட்டத்தில் காங்கேசன்துறைப் பிரி விற்கான பொலிஸ் அத்தி யட்சகர் எஸ்.எஸ்.பி.சேனாதீர கலந்து கொண்டார். இக் கூட்டத்தில் மத குருமார்கள் மற்றும் கிராம உத்தி யோகத்தர்கள் எனப் பலர் கலந்து கெண்டனர். (படம்ஏ.கே.கிறிஸ்தோப்)

வல்வெட்டியில் இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலை களின் 2017 உயர்தர மாண வர்களின் ஏற்பாட்டில இரத் ததான முகாம் நாளை மறு தினம் 13 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை வல்வெட்டித்துறை தர்மகுல சிங்கம் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள் ளது.

மேற்படி இரத்ததான முகா மில் கலந்து கொள்ளும் பெண் களுக்கான விசேட ஏற்பாடுக ளும் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த இரத் ததான முகாமை வெற்றிகர மாக நடத்துவதற்கு அனைவ ரும் உரிய பங்களிப்பை வழங் குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (5-18)

திறன் வகுப்பறை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் திறன் வகுப்பறைத் திறப்பு விழா நாளை 12 ஆம் திகதி வெள் ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அதிபர் வாசுகி பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். போதனா வைத் தியசாலை மருத்துவ நிபுணர் சி.சிவன்சுதன் கலந்து கொள் வார். (5-4)

விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனாவைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற் காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பா ணம் சாவகச்சேரி நுணா வில் ஸ்ரீபூதேவி சீதேவி சமேத விஷ்ணு கோவிலில் விசேட பூஜை வழியாடுகள் இடம் பெறவுள்ளன.

பூசை வழிபாடுகளின் நிறைவில் கோவிலின் பிர தம குருக்கள் வேதாகம வித் துவ சிரோன்மணி சிவஸ்ரீ. தி.கிருஷ்ண மூர்த் திக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாரா யணமும் இடம்பெறவுள் ளன.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தா பனத்தின் தமிழ்ச் சேவை யில் இடம் பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு ஒளிபரப்பு செய்யப்படும்.(5-4)

ஊரெழு மேற்கு ஸ்ரீ மீனாட்சி அம்மன் (கண்ணகி அம்மன்) ஆலய தேர்த்திருவிழா நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

(படங்கள்:ரவிசாந்)

ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்படும் - மகிந்த

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியாகி உயிரிழப் பவர்களின் உடல்களை அடக்கம் செய்ய நாட்டில் அனுமதி வழங்கப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா தொற்று நீர்வ ழியாக பரவாது என நேற்றைய அமர்வின்போது, இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னா ண்டோபுள்ளே தெரிவித்ததை சுட்டிக்காட்டி, எதிர்க்கட்சி பாரா ளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் கேள்வியெழுப்பியி ருந்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, கொரோனா தொற்று காரணமாக உயிரிழப்ப வர்களை அடக்கம் செய்வதற் கும் தகனம் செய்வதற்கும் ஒப்புதல் வழங்கப்படும் என தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்களை மத சம்பி ரதாயங்களின் அடிப்படையில் அடக்கம் செய்ய வேண்டும் என கோரி நாடு முழுவதும் போராட் டம் இடம்பெற்று வருகின்றது.

அத்தோடு அண்மையில் இடம்பெற்ற பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போரா ட்டத்தின் பிரகடனத்திலும் அடக் கம் செய்யும் முறைக்கு அனு மதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டமை யும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

நுண்கடன் நெருக்கடியால் இதுவரை 200 பெண்கள் தற்கொலை

(கொழும்பு)

தமது அவசர தேவைக் கென நுண்கடனை பெற்றுக் கொண்ட நிலையில் அதனை மீளவும் செலுத்த முடியாமல் சுமார் 200 பெண்கள் தற் கொலை செய்து கொண்டுள் ள தாக அதிர்ச்சி தகவல்கள் தெரி விக்கின்றன.

சிங்கள தொலைக்காட்சி யூடியூப் வலைத்தளத்தின் ஊடாக ஒளிபரப்பாகும் நிகழ்ச்சி யொன்றிலேயே இந்த விடயம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

இந்த நுண்கடன் திட் டத்தின் ஊடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர் ந்த பெண்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (நி-4)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று ஜனாதிபதி செயலகத்தில் 12 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

PEARSON INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Acadamic
IELTS General
IELTS Life skills.

Weekday classess
Weekend Classess
Personal Classes
Group Classes
Lecturers are above band 8 years and professionally qualified

98% Students in IELTS Scored above 6.5
Learn the techiniques to score above 6.0
Unbeatable Success rate in Northern Province

Registered Exam Centre for IELTS
Special discounts for upcoming registration
074 188 7878 infopearsonicollege@gmail.com

idp IELTS

No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, Jaffna

சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை கோண்டாவில் தொழிற்பயிற்சி விண்ணப்பம் கோரல் - 2021

பின்வரும் பயிற்சிகளுக்கு பயில விரும்புவர்கள் விண்ணப்பிக்கலாம்

1.நவீன தையல் பயிற்சி
2.ஒப்செற் அச்சுப்பயிற்சி
3.விவசாய உற்பத்திப் பயிற்சி

16 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரங்களை பூர்த்தி செய்து 01.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

முகவரி:- அதிபர், சிவபூமி தொழிற்பயிற்சிப்பாடசாலை, கோண்டாவில், யாழப்பாணம். (5617)

மாணவர்கள் புதிய அனுமதி

சிவபூமி பாடசாலை
(சிறுவர் மனவிருத்திப்பாடசாலை)
கோண்டாவில்-யாழ்ப்பாணம்

2021ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது. பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கு வருகை தந்து அனுமதியை பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி:- சிவபூமி பாடசாலை, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 222 7938

சிவபூமி பாடசாலை
(சிறுவர் மனவிருத்திப்பாடசாலை)
கனகபுரம் - கிளிநொச்சி

2021 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது. பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கு வருகை தந்து அனுமதியை பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி:- சிவபூமி பாடசாலை, 1ஆம் ஒழுங்கை, கனகபுரம், கிளிநொச்சி. (5617)

சிவபூமி நாய்கள் சரணாலயம்-இயக்கச்சி பணியாளர் தேவை

எமது சிவபூமி சரணாலயத்தில் நாய்களை பிரியத்துடன் பராமரிப்பதற்கு பணியாளர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தங்குமிட வசதியுண்டு (குடும்பமாக தங்கியிருப்பது விரும்பத்தக்கது)

(5617)

தொடர்புகளுக்கு :- தலைமை அலுவலகம், சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில். 021 222 7938

வலிகாமம் தெற்கு பிரதேச சபை-சுன்னாகம் ஏலவிற்பனை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்திற்கு விற்கப்படவுள்ளன.

காலம் : 18.02.2021 வியாழக்கிழமை காலை 10.00 மணி

இடம் : **தலைமை அலுவலகம்,வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்**

பொருட்கள் விபரம்:
இலத்திரனியல் பொருட்கள், வாகனபற்றரிகள், உலோகப் பொருட்கள், மின்னியல் பொருட்கள், வாகன டயர்கள்

நிபந்தனைகள்

01. ஏலதாரராக கலந்துகொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும்.
02. சித்தியடைந்த ஏலத்தார் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத் தொகை முழுவதையும் செலுத்திப் பொருட்களை அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
03. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம் தொலைபேசி இலக்கம் 021 224 0017

க.தர்சன்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

பருத்தித்துறை மீன்பிடி துறைமுகத்தை மையப்படுத்தி பாரிய அபிவிருத்தி திட்டம் விரைவில் - டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப்பங்களிப்பில் பருத்தித் துறை மீன்பிடித் துறைமுகத்தை மையப்படுத்திய பாரிய அபிவி ருத்தித் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ். மாவ ட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில், பருத்தித் துறை மீன்பிடி துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிய அபிவிருத்தி வங்கி யின் நிதிப்பங்களிப்பில் பருத் தித்துறை மீன்பிடித் துறைமுக த்தை மையப்படுத்திய பாரிய அபிவிருத்தித் திட்டம் சிலரின் தவறான புரிதல் காரணமாக கைநழுவிப் போகும் நிலை ஏற்பட்டது. ஆனாலும் அதனை மீளப் பெற்றுக்கொள்ளும் முயற் சிகள் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையின் அடிப்படையில் தற்போது ஜனாதிபதி கோட்டாப ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரது பங்களிப்புடன் துரிதமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

குறித்த அபிவிருத்தியால் பருத்தித்துறை துறைமுகம் மாத்திரமன்றி, குருநகர் மற்றும் பேசாலை துறைமுகங்களும், அதற்கு மேலதிகமாக பல்வேறு நாங்கூரமிடும் தளங்கள் மற்றும் இறங்கு துறைகளும் உட்பட பல்வேறு அபிவிருத்தி திட்ட ங்கள் உருவாக்கப்படவுள்ளன.

குறித்த திட்டத்தினால் வட க்கு மாகாணத்தின் துறை முகப் பகுதி சார்ந்த மக்கள் மட்டும ன்றி அனைத்து தரப்பினரும் நன்மை பெறுவர்.

இதன் உத்தேசமதிப்பீட்டுத் தொகை ரூபா 6 பில்லியன்க ளாகும். அதனடிப்படையில் எமது பிரதேசத்தின் நலன் களை மேம்படுத்தும் நோக்கில் கைநழுவிப்போகும் நிலையில் காணப்பட்ட குறித்த திட்டத்தை மீளவும் முன்னெடுக்க தற் போது துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகி ன்றது என அவர் தெரிவித் தார். (5-4)

அபகரிக்கப்பட்ட பிரதேசங்கள் உடன் விடுவிக்கப்பட வேண்டும்

நீர்ப்பாசனத் திணைக்களம் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத் தில் நீர்ப்பாசனத் திணைக் களத்திற்கு சொந்தமான ஒதுக்கீட்டு பிரதேசங்களை வனவளத் திணைக்களம் தமது கட்டுப்பாட்டுப் பிரதே சங்களாக்கியுள்ளமை மற் றும் பொதுமக்களால் ஆக்கி ரமிக்கப்பட்ட பிரதேசங்கள் என்பன விடுவிக்கப்பட வேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்களம் கோரியுள் ளது .

கிளிநொச்சி மாவட்டத் தில் நீர்ப்பாசன திணைக் களத்திற்கு சொந்தமான குளங்களின் நீரேந்து பிர தேசங்கள் மற்றும் ஆற்றுப் படுக்கைகள் பொதுமக்க ளால் ஆக்கிரமிக்கப்பட்டு ள்ளதால் சிரமங்கள் ஏற்படு வதாகவும் அதாவது குளங்க ளின் அபிவிருத்திகள் மற் றும் பருவ மழைகாலங்க ளில் அதிகமாக நீரை வெளி யேற்றுதல், குளங்களை பாது காத்தல், பராமரித்தல் பாரிய பிரச்சினையாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நீர்ப்பாச னத் திணைக்களம் குறிப் பிடுகையில்,

நீர்ப்பாசனத் திணைக் களத்தின் கீழ் உள்ள பண்டி வெட்டி குளம், குடமுருட்டி குளம் ஆகிய நீர்ப்பாசன குளங்களின் நீரேந்து பிர தேசங்களை வனவளத் திணைக்களம் ஆக்கிரமித் துள்ளமை மற்றும் இரத்தி னபுரம், திருவையாறு ஆகிய பிரதேசங்களில் திணைக் களத்திற்கு சொந்தமான காணிகளை பொதுமக்கள் ஆக்கிரமித்துள்ளமை என் பது பாரிய பிரச்சினையாக உள்ளது.

எனவே மேற்படி பிரதே சங்களை விடுவிக்க நடவ டிக்கை எடுக்க வேண்டு மென நீர்ப்பாசனத் திணை க்களம் தெரிவித்துள்ளது.

(5-4-315)

வவு. பொங்கு தமிழ் தூபியைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அமைப்பு



(நெளுக்குளம்)

வவுனியா நகரசபை வாயி லில் அமைந்துள்ள பொங்கு தமிழ் தூபிக்குள் எவரும் பிர வேசிக்கக்கூடாதென தெரிவித்து முட்கம்பியால் வேலி அடைக் கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபையின் ஊழியர்கள் சிலர் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து நகரசபை நிர்வாகத்திற்கு எதிராக கடந்த சிலநாட்களாக சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகி றனர்.

வவுனியா நகரசபையின் பொது நூலகத்தில் பணியாற்றி வந்த ஊழியர் சங்கத்தின் செயலாளர் மற்றும் சில ஊழிய ர்களே தமக்கு நகர சபை நிர் வாகம் அநீதி இழைத்துள்ள தாக தெரிவித்து சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுத்து ள்ளனர்.

போராட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்த ஊழியர் சங்கச் செயலாளர்,

என்னை நகரசபை பூங் காவில் சுத்திகரிப்பு பணியில் நகரசபை நிர்வாகம் அமர்த் தியுள்ளது. இதன் காரணமாக எனது பணியின் முன் அனுபவ காலம் பாதிக்கப்பட்டது.

நகரசபை நிர்வாகம்என்னை எனக்கு மீண்டும் நூலகத்தில் பணி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் அனைத்து ஊழி யர்களின் சம்பள முரண்பாடு, உள்ளக ஆளணி வெற்றிடம், நிரந்தர நியமனம் போன்ற கோரிக்கைகளையும் தீர்த்து வைக்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து தனியாக போராடி வந்த நகரசபை பணியாளர் க.கோல்டனுக்கு ஆதரவு தெரி வித்து சக தொழிலாளர்களும் போராட்டத்தில் இணைந்து ள்ளதுடன், இரவு பகலாக போரா ட்டம் இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் நேற்றைய தினம் காலை போராட்டம் இடம்பெற்றுவரும் பொங்கு தமிழ் தூபியினை சுற்றி நகர சபை நிர்வாகம் முட்கம்பி வேலி அடைத்துள்ளதுடன் அதற்குள் அனுமதியின்றி யாரும் பிர வேசிக்கக்கூடாது என தெரி வித்து பதாகைகளும் காட்சிப்ப டுத்தப்பட்டுள்ளன.

எமது கோரிக்கைகளை இதுவரை எந்த ஒரு மக்கள் பிரதிநிதிகூட வந்து ஏன் என் றும் கேட்கவில்லை. எனவே எமக்கான தீர்வு விரைவில் வழங்கப்படவேண்டும் என் றார். (5-4-299)

பாடசாலைகளின் பௌதீக தேவைகளை நிவர்த்தி செய்து தருமாறு மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்திலுள்ள மூன்று பாடசாலைகளும் பௌதிக வளப் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் இயங்கி வருவதா கவும் இவற்றின் தேவை களை நிவர்த்தி செய்து தரு மாறு அக்கராயன் பிரதேச சிவில் அமைப்புக்கள் கோரி யுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத் தின் குடியேற்ற கிராமமாக காணப்படுகின்ற அக்கராயன் பிரதேசத்தில் உள்ள அக்க ராயன் மகா வித்தியாலயம் ஸ்கந்தபுரம் இலக்கம் 2, பாட சாலை இலக்கம் 01 ஆகிய பாடசாலைகள் போதிய கட்ட வசதிகள், தளபாட வசதிகள் குடிநீர் வசதி என்பன இல் லாது பல்வேறு நெருக்கடி களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றன.

இவ்வாறான நெருக்கடி களை தீர்ப்பதற்கு துறைசார் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

1962ஆம் ஆண்டு 332 குடும்பங்களைக் கொண்ட ஸ்கந்தபுரம் குடியேற்றத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கிளிநொச்சி ஸ்கந் தபுரம் ஒன்று பாடசாலை யும் 1963ஆம் ஆண்டு 156 குடும்பங்களை கொண்டு உருவாகிய கிராமத்தில் அக்கராயன் இலக்கம் 2 பாடசாலையும் 1964ஆம் ஆண்டு 112 குடும்பங்களை கொண்டு உருவாகிய இலக் கம் 2 பாடசாலை ஆகிய பாடசாலைகள் உருவாக்கப் பட்டன.

ஆரம்ப காலத்தில் வழங் கப்பட்ட கட்டடங்களுடன் இயங்கி வரும் இந்த பாடசா லைகளின் தேவைகளை நிறைவு செய்து தருமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை அக்கரா யன் பிரதேச சிவில் சமூக அமைப்புகளும் குறித்த பாடசாலைகளின் தேவை களை நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுத் துள்ளது. (5-4-315)

தீவகம் வேலணையைச் சேர்ந்த அமரர்கள் இராசரெத்தினம் - புஸ்பராணி தம்பதிகளின் நினைவாக கடந்த சனிக்கிழமை அல்லையூர் அறப்பணிக் குடும்பத்தினரின், மூத்தோர் நலன் காக்கும் திட்டத்தின் ஊடாக, கிளிநொச்சி நமசிவாய பவுண்டேசன் ஏற்பாட்டில், கிளி நொச்சியில் வசிக்கும் மூத்தோர் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப் பட்டன.

இராசிபலன்

11.02.2021
தை 29, வியாழக்கிழமை
அமாவாசை பின்னிரவு 1.08 மணிவரை
திருவோணம் பிற்பகல் 2.33 மணிவரை
சுபநேரம் 8.04-9.34 மணிவரை
இராகுகாலம் 2.04-3.34 மணிவரை
சந்திராஷ்டமம்: திருவாதிரை, புனர்பூசம்
அமாவாசை விரதம் வளவன்

மேஷம்

வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகமான நாள், போசன சுகமுண்டு.

ரிஷபம்

குடும்பத்தில் நிலவிவந்த குழப்பங்கள் அகலும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், பயணங்கள் கைகூடும்.

மிதுனம்

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வேலைச் சுமை கூடும் நாள், பிரயாண பயமுண்டு.

கடகம்

நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

சிம்மம்

தொழில் சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், மறைமுக எதிர்ப்புகள் குறையும், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.

கன்னி

மன நிறைவு கூடும் நாள், பொது வாழ்வில் புகழ்கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

துலாம்

செல்வாக்கு அதிகரிக்கும் நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

விருச்சிகம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

தனுசு

தனவரவுகள் வந்து சேரலாம், செய் தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

மகரம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், பயணத்தால் பலனுண்டு.

கும்பம்

சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

மீனம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

துணிந்தார்க்கு சமுத்திரம் முழங்கால் மட்டும்.

ஜெனிவா விவகாரங்களில் அரசு கோரினால் ஆதரவு வழங்கத் தயார்- நளின் பண்டார

(கொழும்பு)

ஜெனிவா விவகாரங்களில் எதிர்க்கட்சியின் ஆதரவு தேவைப்படுமாயின் அரசாங்கம் கோரிக்கை விடுத்தால் முழுமையான ஆதரவை வழங்க நாம் தயாராக இருக்கின்றோம். அரசாங்கம் கோரிக்கை விடுக்காமல் வலிந்து சென்று ஆதரவளிக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் நாடகங்கள் மற்றும் பொய்களினூடாகவே ஆட்சியை முன்னெடுத்துச் செல்கிறது. புதிய அரசியலமைப்பு, கிழக்கு முனையம் ஆகிய விடயங்களில் இவ்வாறு போலியான நாடகங்களை அரங்கேற்றிய அரசாங்கம் தற்போது பொதுஜன பெரமுனவுக்கும் முரண்பாடுகளைப் போல காண்பிக்கிறார்கள்.

நாட்டிலுள்ள உண்மையான பிரச்சினைகளை மறைப்பதற்காக ஊடகங்கள் மத்தியில் இவ்வாறான நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் மரணங்கள் தொடர்பில் போலியான தகவல்களே வெளியிடப்படுகின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் அடிப்படையற்றவையாகும். இறுதியாக ஜே.ஆர்.ஜயவர்தன காலத்திலேயே இவ்வாறான தொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டு ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவின் குடியுரிமை நீக்கப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்காதது தவறாகும். எனவே தாக்குதலை தடுக்க தவறியவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டிய அதே வேளை, இதன் பிரதான சூத்திரதாரிகளையும் கண்டறிய வேண்டும்.

விசாரணைகளின் போது என்னிடம் மிகவும் இரகசியமான காணொளி பதிவுகள் உள்ளன. அவற்றை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வாய்ப்பளிக்குமாறு கோரினேன். எனினும் அதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. அதிலிருந்தே குறித்த ஆணைக்குழு எவ்வாறான நோக்கத்தில் செயற்படுகிறது என்பது தெளிவாகியுள்ளது. தாக்குதல்களை திட்டமிட்ட குழுவினரை இனங்காண்பதற்கான எவ்வித தேவையும் கிடையாது என்ற போக்கிலேயே அரசாங்கம் பயணிக்கிறது.

ஜெனிவா விவகாரங்களில் எதிர்க்கட்சியின் ஆதரவு தேவைப்படுமாயின் அரசாங்கம் கோரிக்கை விடுத்தால் ஆதரவை வழங்க நாம் தயாராகவுள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

சிறுபான்மையினர் எதிர்நோக்கும் சவால்களை அரசின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும்

பாக். பிரதமரிடம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை வருகை தரவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், சமகால அரசியலில் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து, அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுதீன் தலைமையிலான குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



கொழும்பிலுள்ள பாகிஸ்தான் பிரதி உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட் பெட்டியை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்த இக்குழுவினர், நாட்டில் சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகள், முஸ்லிம்களினின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது உட்பட முஸ்லிம்கள் அண்மைக்காலமாக எதிர்கொள்ளும் நெருக்குவாரங்கள் குறித்தும் தூதுவரிடம் எடுத்துக் கூறினர்.

இதுபற்றி கட்சியின் தவிசாளர் அமீர் அலி தெரிவித்ததாவது, உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) சுகாதார வழிகாட்டலுக்கு இணங்க, உலகத்தின் 190 நாடுகள் கொவிட்-19 தொற்றினால் மரணிப்பவர்களுடைய உடல்களை அடக்கம் செய்கின்றன.

மாறாக, இலங்கையில் மாத்திரம் கடும்போக்கு கொள்கையுடன், இந்த அரசாங்கம் தொடர்ந்தேர்ச்சியாக, எமது ஜனாஸாக்களை பலவந்தமாக எரித்து வருகின்றது. இது தொடர்பில், எமக்கு நியாயம் பெற்றுத்தர பாக். பிரதமரது விஜயம் உதவ வேண்டும்.

அத்துடன், இலங்கையிலும் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான வழிவகைகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை, அவர் வலியுறுத்த வேண்டும் என்பதுவும் எமது எதிர்பார்ப்பாகும்.

அத்துடன், இலங்கைக்கு பாகிஸ்தான் செய்து வருகின்ற நல்ல பல உதவிகளுக்கு நன்றிகளை தெரிவித்தனர்.

மேலும், இலங்கை வரும் பாக். பிரதமருடன், தாங்கள் சந்தித்துப் பேசி, தமது கருத்துக்களை தெரியப்படுத்த, ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பதாகவும் மக்கள் காங்கிரஸ் குழுவினர் இச்சந்திப்பின் போது தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் மக்கள் காங்கிரஸின் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் எஸ். சுபைர்தீன், பொருளாளர் ஹுசைன் பைலா ஆகியோர் உடனிருந்தனர். (நி-4)

வீட்டுத்திட்டத்திற்கான மிகுதிப் பணத்தினை பெற்றுத் தருமாறு கோரி கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொழும்புத்துறை கெலன்தோட்டம் ஜே/61 கிராம உத்தியோகத்தர் பிரிவு மக்கள் தங்களுடைய வீட்டுத்திட்டத்தினை பூரணப்படுத்துவதற்கு மேலதிக பணத்தினைப் பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்தி நேற்று கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

சுமார் 40 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்த மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

ஏழு அரை இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுத் திட்டம் கடந்த அரசாங்கத்தின் காலத்தின் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழ் கிடைக்க பெற்றிருந்தது. புதிய வீடு கிடைக்கும் என்ற ஆவலுடன் நாங்கள் பழைய கொட்டில் வீட்டினை இல்லாது செய்தோம்.

தற்போது புதிய வீடும் இல்லை. பழைய வீடும் இல்லை. கட்டிய பாதியில் கடன்களை வாங்கி மேலதிகமாகவும் சிறு வேலைகளைச் செய்து விட்டோம். கடன் தந்த நிறுவனங்கள் வீட்டு வாசலில் வந்து நிற்கின்றது. வாழ்வதா? சாவதா? என்ற வேதனையில் வாழ்ந்து வருகின்றோம்.

இந்த வீட்டுத்திட்டத்தினை முழுமையாகப் பெற்றுத்தர அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், அரசாங்க அதிபரையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இது தொடர்பில் அரசாங்க அதிபர் கருத்துக் கூறுகையில்.

கடந்த 2019 ஆம் ஆண்டு வீடு அமைப்பதற்கு வீடமைப்பு அதிகார சபையினால் வீடு கட்ட அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தது. வீடு கட்டத் தொடங்கிய நிலையில் அவர்களுக்கு மிகுதிப் பணம் கிடைக்கவில்லை. இது தொடர்பில் தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது. அவர்களுக்கு போதிய பணம் கிடைக்கப் பெறாத காரணத்தால் பயனாளிகளுக்கு மிகுதிப் பணத்தினை வழங்க முடியாத நிலையுள்ளதாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கிராமிய அமைச்சு ஊடாக தொடர்பு கொண்டு அவர்களுக்கு மிகுதிப் பணத்தினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க உள்ளோம்.

யாழ்.மாவட்டத்தினை பொறுத்தவரையில் 2 ஆயிரம் ஆயிரம் வீடுகள் 180 கிராமங்களில் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது. வீடுகளுக்கு முழுமையான பணம்கிடைக்கப் பெறவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட பயனாளிகள் கவனயீர்ப்பில் ஈடுபட்டு இவ்வாறு தமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்துவது வேதனையானது.

கொழும்புத்துறை கெலன் தோட்ட மக்களின் கோரிக்கை நியாயமானது. ஆகவே இது தொடர்பில் கிராமிய அமைச்சின் ஊடாக தொடர்பு கொண்டு அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (5-4)

டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் பட்டப் படிப்பைத் தொடர முடியும்

(யாழ்ப்பாணம்)

உடற் கல்வி டிப்ளோமாதாரிகள் அனைவருக்கும் பட்டப்படிப்பினை தொடர ஆவன செய்வேன் என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவால் யாழ்.பல்கலைக்கழகத்தில் உடற்கல்வியை பட்டப் படிப்பாக ஆரம்பிக்கலாம் என பரிந்துரைக்கப்பட்டதையடுத்து இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் அனைவரும் பகுதி பகுதியாக ஒருவருடமோ அல்லது 1 1/2 வருடமோ கல்வி கற்றுப் பட்டப் படிப்பை பூர்த்தி செய்ய ஆவன செய்வேன்.

ஏனெனில் இந்த விடயம் யாழ்.பல்கலைக்கழக நிர்வாக மட்டத்தில் எடுக்கப்படுகின்ற முடிவு என்பதனால் வெகு விரைவில் காலம் தாழ்த்தாது உடற் கல்விப் பட்டப்படிப்பை ஆரம்பிக்க முடியும் எனத் தெரிவித்தார். (5-4)

யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நேற்று புதன்கிழமை காலை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:-சிவசாந்தன்)

சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் போட்டி ஓவம் விளையாட்டுக்கழகம் வெற்றி

(நெளுக்குளம்)

வவுனியா, ஓமந்தை அரச உத்தியோகத்தர் குடியிருப்பின் ஓவம் விளையாட்டுக்கழகம், யாழ்ப்பாணம், கோவளம் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றிற்கிடையில், ஓவம் விளையாட்டுக்கழக மைதானத்தில் 12 ஓவர்களைக் கொண்ட 3 சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் இடம் பெற்றன.

முதலில் துடுப்பாடிய ஓவம், 7 விக்கட்டுகளுக்கு 104 ஓட்டங்களைப் பெற்றது. ரி.லதீஸ்வரன் 37, எஸ்.மௌலிதரன் 14, கஜீவன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். சயந்தன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். கோவளம் 12 ஓவர்களில் 91 ஓட்டங்களைப் பெற்றது. அருட்குமரன் 24, சயந்தன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். நிரோசன் 3, ஜனோஜன், மௌலிதரன், லதீசன் தலா 2 விக்கட்டுக்களை வீழ்த்தினர்.

ஓவம் B அணியுடன் இடம்பெற்ற 2 ஆம் ஆட்டத்தில் முதலில் துடுப்பாடிய கோவளம், 8 விக்கட்டுக்களுக்கு 85 ஓட் டங்களைப் பெற்றது. அருட் குமரன் 21, சிவகுமார் 20, மயூரன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். லவன், சுரேஸ், ஜனா தலா 2 விக்கட்டுக்களை வீழ்த்தினர். ஓவம் B அணி 67 ஓட்டங்களைப் பெற்றது. விஜிதரன் 13, பிரதீப் 08 ஓட்டங்களைப் பெற்றனர். சிவகுமார், புவீந்திரன் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற 3 ஆம் ஆட்டத்தில் முதலில் துடுப்பாடிய கோவளம் 12 ஓவர்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 68 ஓட்டங் களைப் பெற்றது. அருட்குமரன் 19, மயூரன் 15, சயந்தன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். ஜனோஜன் 4, லதீஸ்வரன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். தொடர்ந்து துடுப்பாடிய ஓவம் 4 விக்கட்டுகளுக்கு 70 ஓட்டங்களைப் பெற்றது. மௌலிதரன் 31, நிரோசன் 14 ஓட்டங்களைப் பெற்று ஓவம் அணியின் வெற்றிக்கு வழி சமைத்தனர். ராகவன் 3, சயந்தன் 2 விக்கட்டுக்களை வீழ்த்தினர். (5-4-299)

உலகளாவிய ரீதியில் புதிய கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி - உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனிவா)

உலகெங்கிலும் புதிய கொவிட்-19 நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதன்படி தொடர்ச்சியாக நான்காவது வாரத்தில் உலகளாவிய புதிய கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த வாரம் பதிவான 3.1 மில்லியன் புதிய நோயாளர்கள், அதற்கு முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது 17 சதவீதமாக குறைவடைந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் இன்னும் பல நாடுகளில் இருந்தாலும் உலக அளவில் கொரோனாவுக்கு எதிரான போக்கு ஊக்கமளிப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

புதிய இறப்புகளின் எண்ணிக்கையும் தொடர்ச்சியாக இரண்டாவது வாரமாக வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த வாரம் 88 ஆயிரம் புதிய இறப்புகள் பதிவாகியுள்ளன.

அது அதற்கு முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது 10 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

ஐரோப்பாவும் அமெரிக்காவும் முழுமையான எண்ணிக்கையில் மிகப் பெரிய வீழ்ச்சியைக் கண்டன.

மேற்கு பசுபிக் தவிர அனைத்து பிராந்தியங்களிலும் புதிய இறப்புகள் குறைந்து விட்டதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-4)

இந்தியா-சீனா எல்லைப் பிரச்சினை அமைதியான தீர்வுக்கு ஆதரவு

(வோஷிங்டன்)

அண்டை நாடுகளுடனான எல்லைப் பிரச்சினையில் சீனா அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வது கவலை அளிக்கிறது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அண்டை நாடுகளை அச்சுறுத்தும் வகையில் சீனாவின் செயற்பாடுகளுக்கு கவலை தெரிவித்த அமெரிக்கா, இந்தியா-சீனா இடையேயான எல்லைப் பிரச்சினையில் அமைதியான தீர்வுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கும் என்று தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

அண்டை நாடுகளுடனான எல்லைப் பிரச்சினையில் சீனா அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வது கவலை அளிக்கிறது. எப்போதும் எங்கள் நட்பு நாடுகளுடன் நாங்கள் நிற்போம்.

இந்தியா-சீனா எல்லைப் பிரச்சினை குறித்து உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம். இரு நாடுகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதை நாங்கள் அறிவோம். நேரடி பேச்சுவார்த்தைக்கும் அமைதியான தீர்வு முறைக்கும் நாங்கள்தொடர்ந்து ஆதரவு அளிப்போம் எனத் தெரிவித்தார். (நி-4)

ட்ரம்பிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கு செனட் சபை அங்கீகாரம்

(வோஷிங்டன்)

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கான இரண்டாவது குற்றச்சாட்டு வழக்கு அரசியலமைப்புக்கு உட்பட்டது என்று அமெரிக்க செனட் சபை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வாக்களித்தது.

அதன்படி ஏற்கனவே குடியரசுத் தலைவரை பதவி நீக்கம் செய்வது அரசியலமைப்பிற்கு விரோதமானது என்று குடியரசுக் கட்சியின் சில கவலைகள் இருந்தபோதிலும், வரலாற்று குற்றச்சாட்டு விசாரணையுடன் முன்னேற செனட் சபை வாக்களித்தது.

56 செனட்டர்கள் ஆம் என்றும் 44 பேர் அதற்கு எதிராகவும் வாக்களித்தனர்.

56-44 பிளவு என்பது ஆறு குடியரசுக் கட்சியினர் ஜனநாயகக் கட்சியினருடன் சேர்ந்து வாக்களித்தனர். அமெரிக்காவின் ஜனாதிபதியொருவர் இதற்கு முன்னர் இதுபோன்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்படவில்லை என்றாலும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடை பெற்ற செனட் வாக்கெடுப்பு ட்ரம்பின் இரண்டாவது குற்றச்சாட்டு விசாரணையை முன்னோக்கித்தள்ளியுள்ளது.

இந்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தொடங்கப்பட்டுள்ளதுடன், அடுத்த வாரம் வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-4)

சுற்றுவட்டப் பாதையை வந்தடைந்தது அமீரகத்தின் "ஹோப்" விண்கலம்

(டுபாய்)

அமீரகத்தின் 'ஹோப்' விண்கலம் கடந்த 7 மாத பயணத்திற்குப் பிறகு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிரக சுற்றுவட்டப்பாதையை வந்தடைந்துள்ளது.

இந்தப் பயணத்திட்டத்தில் முதல் முறையாக அமீரகத்தில் முற்றிலும் உருவாக்கப்பட்ட 'ஹோப்' விண்கலம் ஒன்றை 2021 ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்திற்கு அனுப்புவது இதன் நோக்கமாகும்.

இந்த விண்கலமானது மனிதர்கள் இல்லாமல் அனுப்பத்திட்டமிடப்பட்டது.

அதன்படி விண்கலத்தை உருவாக்கும் பணியானது டுபாய் முகம்மது பின் ரஷித் அல் மக்தூம் விண்வெளி மையத்தின் சார்பில் நடைபெற்றது.

இதற்கான முன் தயாரிப்பு பணிகளை அமீரக துணை ஜனாதிபதியும், டுபாய் ஆட்சியாளருமான ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் கடந்த 2016 இல் தொடங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

வுஹான் ஆய்வகத்திலிருந்து கொரோனா பரவியதற்கான வாய்ப்பு மிக மிக குறைவு!

(பீஜிங்)

சீனாவின் வுஹான் நகரத்தில் உள்ள ஆய்வகத்தில் இருந்து கொரோனா வைரஸ் பரவியது என்ற கருத்தை அங்கு ஆய்வு செய்துவரும் உலக சுகாதார அமைப்பு வல்லுநர் குழு நிராகரித்துள்ளது.

வுஹான் ஆய்வகத்தில் இருந்து கொரோனா பரவியமைக்கான வாய்ப்பு மிகமிகக் குறைவு என சீனா - வுஹான் நகரில் ஆய்வு செய்துவரும் உலக சுகாதார அமைப்பு நிபுணர் குழுவின் தலைவர் பீட்டர் பென் எம்பரேக் கூறினார்.

எனினும் வைரஸ் பரவலின் மூலத்தைக் கண்டறிய மேலும் கூடுதல் ஆய்வுகள் அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

தங்களது ஆய்வில் சில முக்கியமான விபரங்களைக் கண்றிய முடிந்தது என உலக சுகாதார அமைப்பு நிபுணர் குழுவின் தலைவர் பீட்டர் பென் எம்பரேக் கூறினார். எனினும் தலைகீழான மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் நேற்று பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசிய அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் மனிதர்களிடையே பரவுவதற்கு முன்னர் முதலில் விலங்குகளிடம் தோன்றி இருக்கலாம் என நம்பப்படுகிறது. ஆனால் அது எப்படி சாத்தியம்? என்பது குறித்து உறுதியான தகவல்களை அவர் வெளியிடவில்லை.

கொரோனாவின் தோற்று வாயைக் கண்டுபிடிக்க முயன்ற போது அது இயற்கையாக வௌவால்களில் இருந்து தோன்றியிருக்கலாம். பின்னர் வுஹான் நகரில் இருந்து பரவியிருக்கலாம் என்ற கருதுகோள் உள்ளது எனவும் நிபுணர் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

சீனாவின் வுஹான் நகரில் அதிகாரபூர்வமாக முதல் கொரோனா வைரஸ் நோயாளி டிசெம்பர் 2019 இல் அறிவிக்கப்பட்டார். அதற்கு முன்பு வரை அப்பகுதியில் கொரோனா வைரஸ் இருந்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை என நிபுணர்கள் கூறுகிறார்கள்.

கொரோனா வைரஸ் வுஹானில் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் ஏனைய பிராந்தியங்களில் அந்தத் தொற்று நோய் இருந்திருக்கலாம் என சீனாவின் சுகாதார ஆணையங்களின் நிபுணர் லியாங் வன்னியன் கூறினார்.

இதேவேளை, நிபுணர் குழுவின்அறிவியல்மூலம்கொரோனா வைரஸ் வுஹான் ஆய்வகத்தில் இருந்து பரவியிருக்கலாம் என்ற கருத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவி இருக்கலாம் என நிபுணர்கள் குழு கூறுகிறது. எனினும் அதற்கான ஆதாரங்கள் எதனையும் அவர்கள் முன்வைக்கவில்லை. (நி-4)

எதிர்ப்பு அரசியல் செய்தால் அழிந்து விடுவோம்-பிரதமர்

(கொழும்பு)

கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு அரசியலை செய்தால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் அதிகாரம் அழிவடைந்து விடுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கிடையே நடந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொட்டுக்கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோணத்தில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார் என்பதை தன்னால் அடையாளப்படுத்த முடியாதென்றும் பிரதமர் குறிப்பிட்டார். (நி-4)

தேசிய நல்லிணக்கத்தைப் பலப்படுத்த மொழிப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது அவசியம்

(கொழும்பு)

சிங்களம் - தமிழ் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தைப் பலப்படுத்த வேண்டுமாயின் தமிழர்கள் சிங்கள மொழியையும், சிங்களவர்கள் தமிழ் மொழியையும் கற்க வேண்டும். தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியை கற்பதில் அதிகம் அக்கறை கொண்டுள்ளார்கள் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு கடந்த வாரம் சென்றிருந்த போது, வடமாகாண கல்வி நிலைமை குறித்து கவனம் செலுத்தப்பட்டது. வடக்கு மாகாண கல்வி வலய சிரேஷ்ட அதிகாரிகளுடன் இணக்கமாக பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டது. வடமாகாண பாடசாலைகளில் உள்ள ஆசிரிய பற்றாக்குறை, ஆசிரிய பயிற்சி, தேசிய பாடசாலையாக முன்னேற்றும் திட்டம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பில் பேசப்பட்டன. இரண்டு வார காலத்துக்குள் பிரச்சினைகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்களம் - தமிழ் ஆகிய இனங்களுக்கு மத்தியில் காணப்படும் மொழிப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பது அவசியமாகும். தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியை கற்பதில் அதிகம் அக்கறை கொண்டுள்ளார்கள். அதற்கான சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தேசிய நல்லிணக்கம் பலப்படுத்த வேண்டுமாயின், மொழிப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். வடக்கில் உள்ளவர்கள் சிங்கள மொழியையும், தெற்கில் உள்ளவர்கள் தமிழ் மொழியையும் கற்க வேண்டும். வடக்கில் உள்ள மாணவர்கள் சிங்கள மொழியை கற்பதில் ஆவலாக உள்ளார்கள். மொழி திட்டத்தை அரசாங்கம் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கும் என அவர் தெரிவித்தார். (நி-4)

விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் புதிய சட்டம் விரைவில் - நாமல்

(கொழும்பு)

நாட்டில் விளையாட்டுத்துறையை நவீனமயப்படுத்தும் நோக்கில் புதிய சட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் அதனை நடைமுறைக்கு கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன வால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் அமைச்சராகி ஐந்து மாதங்கள்தான் ஆகின்றன. கிரிக்கெட் விளையாட்டு வீழ்ச்சியடைய ஆரம்பித்து 05 வருடங்கள் ஆகிவிட்டன.

இந்தக் காலப்பகுதியில் கிரிக்கெட் விளையாட்டு பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. இது எவ்வாறாயினும் இறந்தகாலத்தில் நடந்தவை பற்றி பேசி அர்த்தமில்லை.

எதிர்காலத்தில் சிறந்த

வேலைத்திட்டத்துடன், நாம் பயணிக்க வேண்டும். கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையில் அரசியல்வாதிகளுக்கு கையளிக்க முடியாது. ஐசிசியின் கட்டுப்பாட்டின் கீழ்தான் அது இயங்குகிறது என தெரிவித்தார். (நி-4)

1000 ரூபாயை காட்டி அரசு தொழிலாளர்களை ஏமாற்றுகிறது

சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சம்பள நிர்ணய சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ள ஆயிரம் ரூபா சம்பளத்தின் ஊடாக தற்போது தொழிலாளி ஒருவருக்கு வருடாந்தம் கிடைக்கும் சம்பளத்திலும் பார்க்க 69 ஆயிரம் ரூபா குறைவான சம்பளமே கிடைக்கவுள்ளது.

ஆயிரம் ரூபா என்ற இலக்கத்தை காட்டி அரசாங்கம் தொழிலாளர்களை ஏமாற்றி இருக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை சம்பள நிர்ணய சபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமை ஊடாக கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் இதுவரை கிடைத்து வந்த தொழிலாளர்களுக்கான சலுகைகளும் இல்லாமல் போயுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை வழங்குவதாக தோட்டத் தொழிலாளர்களுக்கு உறுதியளித்திருந்தது.

தற்போது சம்பள நிர்ணய சபையின் ஊடாக 900 ரூபா அடிப்படை சம்பளத்தையும், 100 ரூபா கொடுப்பனவையும் வழங்க தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் ஆயிரம் ரூபா வாக்குறுதியின் பின்னால் மறைந்த இரகசியங்கள் உள்ளன. அவற்றை வெளியிட வேண்டும்.

அன்று 750 ரூபா அடிப்படை சம்பளத்துடன் வருடத்திற்கு 300 நாட்களுக்கு வேலை வழங்க தோட்டக் கம்பனிகள் கூட்டு ஒப்பந்தத்தில் இணக்கம் வெளியிட்டிருந்தன. அதன் மூலம் தோட்டத்தொழிலாளர்களுக்கு வருடத்துக்கு 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கின்றது.

ஆனால் இப்போது ஆயிரம் ரூபா சம்பளமானது மாதத்துக்கு 13 நாட்களே தொழில் வழங்கப்படுகின்றது. வருடத்துக்கு 156 நாட்களே தொழில் வழங்கப்படும் என்பதுடன் வருடத்துக்கு 156,000 ரூபா சம்பளமே கிடைக்கும். இதன்படி வருடத்திற்கு தொழிலாளியொருவர் 69 ஆயிரம் ரூபாவை இழக்கும் நிலைமை ஏற்படும். இதனை மறைத்தே இந்த ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படவுள்ளது எனத் தெரிவித்தார். (நி-4)

ரத்நாயக்கவுக்கு தடுப்பூசி

(கொழும்பு)

வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி. பி. ரத்நாயக்கவுக்கு நேற்று புதன்கிழமை கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இராணுவ வைத்தியசாலையில் அவர் கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொண்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று உறுதியான இருவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணிய நிலையில் சி. பி. ரத்நாயக்க, கடந்த சில மாதங்களில் இரண்டு சந்தர்ப்பங்களில் தனிமைப்படுத்தப்பட்டார்.

இதனை அடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகள் கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

கொக்குவில் ஸ்ரார் அணியை வீழ்த்தியது நல்லூர் புரொன்கொஸ்

ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக் கிண்ணம் 2021 தொடரின் 8 ஆவது தகுதி காண் போட்டி கடந்த 4 ஆம் திகதி சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் நல்லூர் புரொன்கொஸ் அணி கொக்குவில் ஸ்ரார் அணியை 45 ஓட்டங்களால் வெற்றி பெற்று இரண்டாவது வெற்றியை பதிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் அணி 18 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியில் கல்கோகன் 10, டார்வின் 42, பானுஜன் 51 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் நல்லூர் அணியில் பிரதீஷ் 2, சாகித்தியன் 1, எட்வின் 1 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

111 வெற்றி இலக்குடன் களமிறங்கிய கொக்குவில் அணி 16.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

போட்டியில் றஜீவ்குமார் 19, பிரதீஷ் 16 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் கொக்குவில் அணியின் பிரதீப் 3, ரேம்ஸ் 1, டார்வின் 2, சஜீரன் 1, கஜன் 1 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். இப்போட்டியில் நல்லூர் அணியின் பானுஜன் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார். (4)

பல்கலை.மாணவர்களுக்கு சலுகை அடிப்படையில் கணனிகள்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு சலுகை கொடுப்பனவு திட்டத்தின் கீழ் மடிக்கணனிகளை வழங்கும் திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

முழு கல்வி முறையையும் தற்காலத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் டிஜிற்றல் மயமாக்குவதற்கான "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக மக்கள் வங்கியின் உதவியுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்திற்காக மக்கள் வங்கி ரூபாய் 3 பில்லியனை ஒதுக்கியுள்ளது.

இணைய இணைப்பு, மென்பொருள் பொதி மற்றும் 4 வருட உத்தரவாதத்துடன் மடிக் கணனிகள் வழங்கப்படுகின்றன. ஒரு கணனியின் பெறுமதி 80,000 ரூபாவாகும்.

தொழிலொன்று கிடைத்த பின்னர் 6 ஆண்டுகளில் மொத்தப் பெறுமதியை திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் கடன்கள் வழங்கப்படுகின்றன. மாணவராக இருக்கும் காலத்தில் மாதாந்தம் செலுத்த வேண்டிய தொகை ரூபாய் 500 ஆகும். 2021 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக நுழைவைப் பெறும் ஆறு புதிய மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தை அடையாளப்படுத்தும் வகையில் அதற்கான கடிதங்களை நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் அவரே வழங்கி வைத்தார்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (நி-4)

மொட்டுக் கூட்டணியை எவராலும் பிளவுபடுத்த முடியாது - கெஹலிய

(கொழும்பு)

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவராகவும் அந்தக் கட்சி தலைமையிலான கூட்டணியின் தலைவராகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே உள்ளார். எனவே, இந்தப் பலமிக்க கூட்டணியை எவராலும் பிளவுபடுத்த முடியாது" இவ்வாறு ஊடகத்துறை வெகுஜன அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைத்துவம் மாற்றப்பட வேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ச கூறியுள்ள கருத்துத் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்பது ஒரு பரந்த கூட்டணியாகும். எனவே, இதன் உறுப்பினர்களுக்கு வெவ்வேறு கருத்துக்களை - கோரிக்கைகளை முன்வைப்பதற்கு உரிமை இருக்கின்றது. அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு மாத்திரமல்ல சகலருக்கும் அந்த உரிமை உண்டு. எனினும், அவை தொடர்பான இறுதித் தீர்மானம் கட்சியின் உயர்மட்டத்திலேயே எடுக்கப்படும்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவராகவும் அந்தக் கட்சி தலைமையிலான கூட்டணியின் தலைவராகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே உள்ளார். தலைவரை மாற்றும் உத்தேசம் இதுவரைக்கும் இல்லை.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்தப் பலமிக்க கூட்டணியை எவராலும் பிளவுபடுத்த முடியாது" என ரம்புக்வெல தெரிவித்தார். (நி-4)

பதுளை மாநகர சபையின் செயற்பாடுகள் இடைநிறுத்தம்

(பதுளை)

பதுளை மாநகர சபையின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் அறிவித்துள்ளார்.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் கையெழுத்திட்ட சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு மூலம் இந்த நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாநகர சபையின் அதிகாரங்கள் விசேட ஆணையாளரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக ஊவா மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதன்படி பதுளை மாநகர சபையின் செயற்பாடுகள் நேற்று புதன்கிழமை முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

மன நோயாளிகள்

ஒருவர் மிகக் கவலையோடு வந்தார். ஏன் இப்படி ஒரு மாதிரியாக வருகின்றீர்கள் என்று கேட்டேன். என்னைப் பார்த்து ஒருத்தன் பைத்தியம் என்று சொல்லி விட்டான் சேர். அவன் அப்படிச் சொன்னதற்கு பின்பு நான் இப்படி ஆகிவிட்டேன் என்றார்.

அதற்காக நீங்கள் பெருமைப்படுங்கள் என்றேன். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் என்னை ஒரு மாதிரியாக பார்க்க ஆரம்பித்து விட்டார்.

நான் ஓஷோ சொல்லியிருக்கின்ற சில கருத்துக்களை எடுத்துச் சொன்னேன்.

இந்த உலகத்திலே பல பெரிய மேதாவிகள் எல்லாம் சாதாரண மக்கள் கண்ணுக்குப் பைத்தியமாகத்தான் தெரிந்திருக்கின்றார்கள். ஏன் என்றால் மற்றவர்கள் மாதிரி அவர்கள் கவலைப்படுவதில்லை, எதற்கும் இறுக்கம் அடைவதில்லை, சாவைக் கண்டு பயப்படுவதில்லை, அற்பமான மகிழ்வுக்கு ஆசைப்படுவதில்லை.

அவர்கள் முழுமையாக வாழ்கின்றார்கள். மற்றவர்களை இது பாதிக்கின்றது. ஏன் என்றால் இவர்களாலே அவர்கள் மாதிரி அலட்டிக் கொள்ளாமல் இருக்க முடிவதில்லை. அதனால் வெறுக்க ஆரம்பித்து விடுகின்றார்கள்.

அவன் கிடக்கின்றான் பைத்தியக்காரன் என்று சொல்லி அவர்களுக்குள்ளே ஆறுதல் அடைய முயற்சி செய்கின்றார்கள்.

ஓர் உண்மை என்ன தெரியுமா? இந்த உலகத்தில் பைத்தியக்காரர்களும் புத்திசுவாதீனம் இல்லாதவர்களுக்கும் தான் மகிழ்ச்சியாகவும் கொண்டாட்டமாகவும் இருக்கிறார்கள். அதனால் நமக்கெல்லாம் புத்திசுவாதீனத்துடன் கூடிய ஒரு பைத்தியக்காரத் தன்மை இருக்கிறது நல்லது தான். அப்படி இருந்தால் தான் வாழ்க்கையைக் கொண்டாட முடியும்.

ஒரு மனநல மருத்துவமனையில் ஒருத்தர் சிகிச்சைக்காக சேர்ந்திருந்தார். சேர்ந்து ஒரு வருடமாகியது. தான் குணமாகி விட்டேன் என்கின்றது அவருக்குத் தெரிந்து போய்விட்டது. டாக்டரிடம் விபரத்தைச் சொன்னார். அவரும் சொன்னார்...

நீங்கள் சொல்வது சரியாகத்தான் இருக்கும். இருந்தாலும் உங்களை இங்கேயே வைத்திருந்து சில சோதனைகள் எல்லாம் செய்து பார்த்துவிட்டு அதன் பின்பு வீட்டுக்கு அனுப்புகின்றோம் என்றார்.

அதேபோல் சோதனைகள் எல்லாம் செய்து பார்த்தார். இவர் சொல்வது உண்மைதான் என்று தெரிந்தது. வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டார். அதன் பின்பு இவர் தன்னுடைய அனுபவங்களைச் சொன்னார்.

எப்படி இருந்தது மருத்துவமனை வாழ்க்கை? என்று கேட்டார்கள் நண்பர்கள் எல்லோரும். அப்பொழுது இவர் சொன்னார்...

நான் ஒரு வருடம் பைத்தியங்களோடு பைத்தியமாக வாழ்ந்தேன். அதிலே கொஞ்சம் கூட சிரமம் தெரியவில்லை. ஆனால் நான் புத்தி தெளிந்த பின்பும் ஒரு வாரம் அவர்களோடு இருந்தேன். அந்த ஒரு வாரம் எனக்கு ஒரு யுகமாகத் தெரிந்தது. அவ்வளவு கஷ்டம் என்றார்.

அதனால் ஒரு கூட்டத்தில் இருந்து வேறுபட்டு வாழ்வது என்பது கொஞ்சம் சிரமம்தான். பைத்தியங்களுக்கு மத்தியில் பைத்தியமாக இருந்து விடலாம். பைத்தியங்களுக்கு மத்தியில் புத்திசுவாதீனம் உள்ளவனாக இருக்கிறதற்கு மிகவும் சாமர்த்தியம் தேவைப்படுகின்றது.

ஹிட்லர் ஒரு சமயம் ஒரு பைத்தியக்கார மருத்துவமனைக்குப் போயிருக்கின்றார். பார்வையிடுவதற்காக மன நோயாளிகளையெல்லாம் வரிசையாக நிறுத்தி வைத்திருந்தார்கள். அவர் வந்தவுடன் எல்லோரும் ஹிட்லர் வாழ்க என்று கத்த வேண்டும் என்று அங்கே உள்ள டாக்டர் சொல்லி வைத்திருந்தார்.

ஹிட்லர் வந்தார். சொல்லி வைத்தது மாதிரியே எல்லோரும் கத்தினார்கள். ஒருத்தர் மட்டும் கத்தாமல் அமைதியாக நின்று கொண்டு இருந்தார்.

ஹிட்லர் அவரிடம் போனார். ஏன் நீங்கள் மட்டும் ஹிட்லர் வாழ்க என்று சொல்லாமல் நிற்கின்றீர்கள் என்றார். அதற்கு அவர் மெதுவாக நான் பைத்தியக்காரன் இல்லை டாக்டர் என்றார்.

அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021



02

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

எனவே இவ்வாறாக நான்சி பெலோசி பதவிக்கு வர வேண்டிய சூழல் ஏற்பட்டால் அது பல சட்டப் போராட்டங்களை உருவாக்கும் என்று வல்லுநர்கள் அப்போது கூறி யிருந்தார்கள்.

ஒருவேளை நான்சி பெலோசி அந்தப் பொறுப்பை ஏற்க முடியவி ல்லை அல்லது விரும்பவில்லை என்றால் ஆளும் குடியரசுக் கட்சி யின் மூத்த செனட் சபை உறுப்பி னரான 87 வயதான சார்லஸ் இகி ரேஸ்லி இடம் ஜனாதிபதி பதவியை ஏற்குமாறு கேட்கப்படலாம் என்றும் கூறப்பட்டது. இத்தகைய முடிவும் சட்ட போராட்டங்களைச் சந்திக்க வாய்ப்புள்ளது என்றும் கருதப்பட் டது.

ட்ரம்பால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாத சூழல் ஏற்படுமா? என்ற அதிர்வலைகள் தோன்றின

ஒரு கட்சியால் ஜனாதிபதித் தேர் தல் வேட்பாளராக நிறுத்தப்படுபவர் செய்யலாம். ஒருவேளை ஜனாதிபதி வேட்பாளராக மைக்பென்ஸ் தேர்வு செய்யப்பட்டால், புதிய துணை ஜனா திபதி வேட்பாளர் ஒருவர் தேர்வு செய்யப்பட வேண்டும். ஆனால் இதுவரை கால ஜனாதிபதி தேர்தல்க ளில் ஜனாதிபதி வேட்பாளரை முடிவு செய்த பிறகு குடியரசுக் கட்சியோ அல் லது ஜனநாயக கட்சியோ வேட்பா ளரை மாற்றியதில்லை.

போட்டியில் இருந்து ஒருவர் விலகிவிட்டால் அவருக்குப் பதில் வாக்குச்சீட்டில் பெயர் மாற்றுவது எப்படி?

என்ன நடந்தாலும் ட்ரம்பின் பெயர் வாக்குச்சீட்டில் இருக்கும் என்று தேர்தல்கள் விவகாரத்தில் நிபுணத்துவம் பெற்ற சட்டப் பேராசிரி யர் ரிச்சர்ட் பைல்ட்ஸ் கூறியிருந்தார். தங்கள் வேட்பாளரின் பெயரை வாக்குச்சீட்டில் மாற்ற குடியரசுக் கட்சி நீதிமன்றத்தை நாடினால் அதற்கான தீர்வு குறுகிய காலத்துக்குள் கிடைக் காதென்றும் அதாவது அதற்கு அப் போதைய நிலையில் போதிய நேரம் இல்லை என்றும் சட்டப் பேராசிரியர்

ட்ரம்ப் கொரோனா காரணமாக வால்டர் ரீட் தேசிய இராணுவ மருத்துவமனைக்குச் செல்லல்.

தேர்தல் நேரத்தில் நல்ல நிலை யில் இல்லை என்றால் அதற்கான சட்டத் தீர்வுகளும் உள்ளன என்று இணையத்தள பத்திரிகைகள் தெரி வித்திருந்தன. ஏற்கனவே குடியர சுக் கட்சி ட்ரம்பை தங்கள் ஜனாதி பதி வேட்பாளராக அறிவித்திருந் தது. சட்டத்தின்படி ஜனாதிபதி இல்லாத போது துணை ஜனாதி பதி, ஜனாதிபதி பொறுப்புகளை ஏற்கலாம். எனவே துணை ஜனாதி பதி, ஜனாதிபதி வேட்பாளராக முடியும். ஆனால் துணை ஜனாதி பதி மைக்பென்ஸ் மட்டுமே அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக முடியும் என்ற கட்டாயம் இல்லை.

குடியரசுக் கட்சியின் விதிகளின் படி அக்கட்சியின் தேசிய கமிட்டியின் 168 உறுப்பினர்களும் கூடி புதிய ஜனாதிபதி வேட்பாளரை முடிவு ரிச்சர்ட்பைல்ட்ஸ் மேலும் கூறியிருந் தார். கலிபோர்னியா பல்கலைக்கழ கத்தின் சட்டப் பேராசிரியர் ரிக்ஹே சன் கூறுகையில், ஜனாதிபதி தேர்த லுக்கான தபால் வாக்குகள் ஏற்க னவே பல இலட்சம் பேருக்கு அனுப் பப்பட்டு விட்டதாகவும் அந் நேரத் தில் சில மாநிலங்களில் நேரடி வாக் குப்பதிவும் தொடங்கி இருந்ததாக வும் அதன்காரணமாக, வாக்குச்சீட் டில் ஜனாதிபதி பதவிக்கு வரத் தகுதியில்லாத வேட்பாளரின் (ட்ரம் பின்) பெயருடனேயே வாக்குப்பதிவு தொடர்ந்து நடைபெறும் என்றும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு பல இணையத்தளங்க ளில், பத்திரிகைகளில் பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளிவந்து கொண்டி ருக்கையில் ஜனாதிபதி ட்ரம்ப் தான் குணமடைந்துவிட்டதாகக் கூறி அமெ

ட்ரம்பின் கொரோனாத் தாக்கம் பற்றி மருத்துவமனையிலிருந்து டாக்டர் செய்தியாளர்களுக்கு விளக்குகிறார்.

ரிக்க மக்களை ஆச்சரியப்படுதிய தோடு அதிர்ச்சியும் அடையவைத் தார். ட்ரம்பின் இச் செயற்பாடு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு சாதமாக இருக்கும் என்று ஒரு சாரா ரும் பாதமாக இருக்கும் என்று இன்னொரு சாராரும் தேர்தலுக்கு முன் கூறிவந்தது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ட்ரம்பின் கொரோனா பற்றியும் அத னால் ஏற்படப்போகும் அமெரி க்க அரசியல் சூழ்நிலை பற்றி யும் பல இணையத்தளங்களில், பத்திரிகைகளில் பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளிவந்து கொண் டிருக்கையில் ஜனாதிபதி ட்ர ம்ப் தான் குணமடைந்துவிட்ட தாகக் கூறி அமெரிக்க மக் களை ஆச்சரியப்படுதியதோடு அதிர்ச்சியும் அடையவைத்தார்.

சென்ற ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் நடந்தவை

சென்ற ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதித் தேர் தல் நடைபெற்ற தினத்திலிருந்து இந்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி புதன்கிழமை வோஷிங்டன் டி.சி.யில் உள்ள கபிடல் கட்டடத்தின் படிகளில் நடைபெற்ற புதிய அமெரி க்க ஜனாதிபதி ஜோ பிடனின் அதிகார பூர்வமான பதவியேற்பு வரை நடைபெற்ற சம்பவங்களை தொகு த்து வழங்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சென்ற ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதி அமெரிக்க ஜனாதி பதித் தேர்தல் நடைபெற்ற தின த்திலிருந்து இந்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி புதன் கிழமை வோஷிங்டன் டி.சி.யில் உள்ள கபிடல் கட்டடத்தின் படிகளில் நடைபெற்ற புதிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனின் அதிகாரபூர்வமான பதவியேற்பு வரை நடைபெ ற்ற சம்பவங்களை தொகு த்து வழங்குவதே இக் கட்டு ரையின் நோக்கமாகும்.

இம்முறை ஜனாதிபதி தேர்தலு க்குப் பின் வழமைக்கு மாறாக பல சர்ச்சைகள் இருந்தன. தேர்தலுக்கு பின் இருந்த சர்ச்சைகளைப்பற்றி பார்க்குமுன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முறை பற்றி சிறிது அறி ந்துகொள்வது அவசியமாகிறது.

அத்துடன் அமெரிக்க ஜனாதி பதித் தேர்தல் சட்டங்கள் பற்றியும் தெரிந்துகொண்டால்தான் இக் குழப்ப நிலைகளைப் பற்றி தெளிவு கிட்டத் தொடங்கும்.

முன்னர் கூறியது போல் அமெரி க்க ஜனாதிபதியின் பதவிக் காலம் 4 ஆண்டுகள். அமெரிக்க அரசியல் சாசனத்தின் 24 ஆவது திருத்தத் தின் படி ஒருவர் இரண்டு முறை மட்டுமே ஜனாதிபதியாக முடியும்.

ஒவ்வொரு நான்கு ஆண்டுகளு க்கு ஒருமுறை நவம்பர் மாதம் முதலாம் திகதிக்குப்பின் வரும் முதல் செவ்வாய்க்கிழமை தேர்தல் நடத்தப்படும் என்பது மாற்றம் இல் லாதது, நிலையானது. (நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் செவ் வாய்க்கிழமையானால் அன்று தேர்தல் நடைபெறாது)

அமெரிக்க அரசியலில் ஒரு எழுதப்படாத வழக்கம்

அமெரிக்க ஜனாதிபதியாக ஒரு வர் இருமுறை பதவி வகிக்கலாம் அதற்கு மேல் பதவி வகிக்க முடியாது என்பது சட்டம். அமெரிக்க அரசிய லில் ஒரு எழுதப்படாத வழக்கம் உள் ளது.

அந்தவகையில் போட்டியிட்டு முதல் முறை ஜனாதிபதியாக பதவி வகிப்பவரே, அடுத்த தேர்தலிலும் (இரண்டாவது தடவையாக) வெற்றி பெற்று ஜனாதிபதியாவார். இப்படிப் பட்ட ஒரு எழுதப்படாத வழக்கத்தி னால் 1788 ஆம் ஆண்டிலிருந்து தற்போதுவரை நடைபெற்று வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தொடர்ச்சியாக இருமுறை அமெரிக் காவின் ஜனாதிபதியாகப் பதவியேற் றவர்களே அதிகம்.

(தொடரும்...)

எமது மக்களுக்கு உரிமை-அபிவிருத்தி எதுவுமில்லை-சபையில் இரா.சாணக்கியன்

(கொழும்பு)

எமது மக்களுக்கு உரிமையும் இல்லை, அபிவிருத்தியும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் மட் டக்களப்பு மாவட்டம் வெள்ளத் தால் பாதிக்கப்படுகிறது, வெள் ளத்தால் சூழ்கடிக்கப்படுகின் றது. மக்கள் ஒவ்வொரு வருட மும்பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள குளங்கள் முறையாக புனரமைக்கப்படாமை வெள் ளப்பெருக்கிற்கான பிரதான காரணமாகும்.

எம்மக்களுக்கான வெள்ள நிவாரண நிதியானது ஒவ் வொரு வருடமும் ஒதுக்கப்பட வேண்டும். ஆறுகள் மற்றும் குளங்களை முறையாகப் புனர மைத்தால் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

எங்களுடைய உரிமை சார் ந்த கவனயீர்ப்பு போராட்டமான #P2P போராட்டத்திற்கு கண்ட னம் தெரிவிக்கப்படுகின்றதே தவிர இவ்வாறான எமது மக்க ளுக்கு பயனுள்ள பொருளாதார த்தை மற்றும் வாழ்வாதார த்தை கட்டமைக்கும் சிறந்த திட்டங்களை நடைமுறைப்படு த்துவது குறித்து கவனம் செலு த்தப்படுவதில்லை.

எமது மக்களுக்கு உரிமை யும் இல்லை,அபிவிருத்தியும் இல்லை" என மேலும் குறிப்பிட் டுள்ளார். (நி-4)

ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி

கஷ்டங்களை போக்கும் காயத்ரி மந்திரம்

(தொடர்ச்சி)

கும்பாபிஷேக திருப்பணிகள் நடை பெறும்போது யாக சாலைகள் அருகில் அமர்ந்து காயத்ரி மந்திரம் சொல்லலாம். இது 100 மடங்கு பலன்களை அதிகமா கத் தரும்.

காயத்ரி மந்திரத்தைச் சொல்ல சொல்ல குடும்பத்தில் மங்களம் உண்டாகும். அதோடு நான்கு வேதங்கள் ஓதியதன் பலன் கிடைக்கும்.

இந்தக் கட்டுரையின் முதலில் கொடு க்கப்பட்டதுதான் மூல காயத்ரி மந்திரம். இதுதவிர ஒவ்வொரு கடவுளுக்கும் முழுமுதலாகக் கொண்ட கிளை காயத்ரி மந்திரங்களும் உண்டு. அதாவது விநா யகர் காயத்ரி மந்திரம், சண்முகர் காய த்ரி மந்திரம், அனுமன் காயத்ரி மந்திரம் ... என்று அந்தந்த கடவுளுக்கு ஏற்ப காயத்ரி மந்திரங்கள் உள்ளன.

அவற்றை மனப்பாடமாகப் படித்து மனதில் நிறுத்திக் கொள்ளலாம். ஆல யத்துக்குச் செல்லும்போது அந்த காய த்ரி மந்திரத்தை உச்சரித்தால் நல்ல பலன் கள் உங்களைத் தேடி வரும்.

ஒவ்வொரு ஆண்டும் ஆவணி அவிட் டத்துக்கு மறுநாள் காயத்ரி ஜெபம் வரும். அன்று 1008 தடவை காயத்ரி மந்திரம் ஜெபிக்க வேண்டும் என்பது மரபு.

காயத்ரி மந்திரத்தை நீங்கள் எந்த அளவுக்கு ஜெபிக்கிறீர்களோ அந்த அளவுக்கு அறிவுக் கூர்மை உண்டாகும்.

இவ்வுலகில் எல்லா விருப்பங்களை யும் பூர்த்தி செய்ய வல்லது காயத்ரி மந்திரம் மட்டுமே என்று தேவிபாகவதம் சொல்கிறது.

"மூன்று வருடங்கள் காயத்ரி மந்தி ரத்தை ஜெபித்து வருபவர் வாயு போல சுதந்திரமாக இயங்கி பிரம்மத்தை சென்று அடைவார்" என்று மனுஸ்மிருதி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆலயத்துக்குச் செல்லும்போதும் மற்ற நேரங்களிலும் காயத்ரி மந்திரத்தை ஜெபித்து மனம் பக்குவப்பட்டு விட் டால் அவர் எந்த ஒரு செயலிலும் நிதா னமாகவும் தெளிவாகவும் இருப்பார்.

காயத்ரி மந்திரத்தை தினமும் மூன்று நேரம் உச்சரிப்பவர்கள் எல்லா விட யங்களிலும் மிகச் சரியான முடிவு எடுப் பவர்களாக இருப்பார்கள். சத்தியவான் உயிரைக் காப்பாற்ற சாவித்திரி தேவிக்கு காயத்ரி மந்திரமே உதவியது.

முனிவரின் சாபத்துக்கு எதிராகக் காலகதியையே ஸ்தம்பிக்க வைத்த நளாயினிக்கு உதவியது காயத்ரி மந்தி ரமே. மும்மூர்த்திகளின் சோதனையை அனுசுயாதேவி அறிந்து கொள்ள காயத்ரி மந்திரமே உதவியாக இருந்தது.

14 ஆண்டுகள் வனவாசம் சென்ற ராமர் - லட்சுமணர் இருவருக்கும் சோர்வு ஏற்படாமல் இருக்க காயத்ரி மந்திரமே உதவியாக இருந்தது.

சுருக்கமாகக் கூறினால் அவரவர் கோரிக்கைக்கு ஏற்ப அந்தந்த தெய்வத் துக்கு உரிய காயத்ரி மந்திரங்களை ஆலய வழிபாடுகளின்போது சந்நிதி முன்பு அமர்ந்து ஜெபித்தால் வாழ்வில் எந்தக் கஷ்டமும் வராது.

சில ஆலயங்களில் காயத்ரி தேவிக்கு தனி சந்நிதி இருக்கும். அங்கு காயத்ரி மந்திரத்தை ஜெபித்தால் முழுமையான பலன்களைப் பெறலாம்.

கடவுளுடன் மிக மிக எளிமையாக நம்மை இணைப்பது காயத்ரி மந்திரங் கள்தான். எனவே காயத்ரி மந்திரங்க ளைத் தெரிந்து கொண்டு ஆலய வழி பாடுகளின்போது அவற்றைப் பயன்படுத் திப் பயன்பெறுங்கள்.

(முற்றும்)

செய்தித்துளிகள்

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி ஏற்றுமதி செய்த நபர் கைது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உலர்ந்த பாக்குகள் அடங்கிய கொள்கலன்கள் உரிய முறைமையை விடுத்து போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அவற்றை இந்தியாவுக்கு மீள் ஏற்றுமதி செய்யப்படும் வர்த்தகம் தொடர்பான தகவல் குற்றப்புலனாய்வுப் பிரிவினால் கண்ட றியப்பட்டுள்ளது.

அவிசாவளை பகுதியைச் சேர்ந்த 39 வயதான சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்ட பின்னர் முன்னெ டுக்கப்பட்ட விசாரணைகளில் இது தொடர்பான தகவல்கள் தெரியவந்துள் ளன.

சந்தேகநபர் உரிய நடைமுறையை மீறி வரி செலுத்தாமல் 23 கொள்கலன்கள் மீள் ஏற்றுமதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுவதோடு இதன் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பில் கணக்கிடப்படுகின்றது.

அத்துடன் சந்தேகநபர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய பின்னர் மேலதிக விசார ணைகள் மேற்கொள்ளப்படும் எனப் பொலிஸார் தெரிவித் தனர். (நி-4)

சட்டவிரோத மின் இணைப்பில் சிக்கி சிறுவன் உயிரிழப்பு

(மூதூர்)

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தனவெட்டு பகுதியில் அங்கீகரிக்கப்படாத மின் இணைப்பில் சிக்கி 8 வயதான சிறுவன் மரணமடைந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் மூதூர் பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவரே மரணித்துள்ளார்.

அவர் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணித்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளதோடு அனுமதியின்றி மின்சாரம் பெற்ற இரு வரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. (நி-4)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி ரூபா	சாவகச்சேரி ரூபா	கிளிநொச்சி ரூபா
கத்தரிக்காய்	250	320	200
உருளைக்கிழங்கு	120	130	140
பச்சைமிளகாய்	450	650	600
தக்காளி	200	220	240
மரவள்ளிக்கிழங்கு	50	70	50
கோவா	80	100	100
கரட்	160	230	240
பூசணி	120	130	200
புடோல்	180	200	160
வாழைக்காய்	50	60	100
சின்ன வெங்காயம்	350	500	400
பெரிய வெங்காயம்	100	80-100	100
பாகற்காய்	180	240	300
வெண்டிக்காய்	180	200	200
கருணைக் கிழங்கு	80	120	140
பயற்றங்காய்	140	200	200
லீக்ஸ்	100	150	160
பீற்றூட்	200	220	200
கறிமிளகாய்	300	350	350
முருங்கைக்காய்	--	--	--
போஞ்சி	120	160	150
சுத்தரிதம்புள்ள	200	--	160
கீரை - 1 பிடி	80	80	60
தேசிக்காய்	120	140	100
தேங்காய் (ஒன்று)	80	60-80	70-100
இராசவள்ளி	160	200	220
வெங்காயப்பூ	240	280	300
முள்ளங்கி	140	120	120
பொன்னாங்காணி	40	60	40
வல்லாரை	15	30	30
ஈரப்பலா	150	--	80

சோம்பேறி குரங்கும் நண்பேன்டா ஆமையும்

ஒரு காட்டில் சேட்டை யான குரங்கு ஒன்றும் அமை தியான ஆமை ஒன்றும் நல்ல நண்பர்களாக இரு ந்தன. குரங்கு, ஆமை இர ண்டுக்குமே வாழைப்பழம் என்றால் உயிர்.

காட்டில் இருக்கிற மர ங்களில் தேனீக்கள் கூடு கட்டியிருந்ததால் அந்த மர ங்களில் இருக்கிற பழங் களைப் பறித்து சாப்பிடுவ தற்கு இரண்டுக்கும் பயமோ பயம்.

ஒருநாள் மாலை நேரம் இரண்டும் ஆற்றங்கரை யில் உட்கார்ந்து இதுபற்றி ஆழமாக கலந்தாலோனை செய்தன. ஆலோசனை முடி வில் நாம் ஏன் ஒரு வாழை மரத்தை வளர்க்கக் கூடாது என்று இரண்டும் யோசித் தன. மறுநாளே எங்கேயோ இருந்து ஒரு வாழை மரத் தைக் கொண்டுவந்தது ஆமை. இரண்டும் சேர்ந்து சிறிய பள்ளம் தோண்டி அதற்கு ள்ளே மரத்தை நட்டன.

கொஞ்ச நாளில் மழை பெய்ய, வாழைமரம் துளிர் விட்டு சின்ன வளர ஆரம் பித்தது. சேட்டை பிடிச்ச குரங்கு மரத்துக்கு மரம் தாவிக் கொண்டு இருக்க, ஆமை மட்டும் அந்த மரத் திற்குத் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றுவது, மாட்டுச் சாணம் கொண்டு வந்து போடுவது என்று மிகவும் ஆர்வமாக இருந்தது.

சில வருடங்கள் போச்சு. மரம் பெரிதாக வளர்ந்து பூ பூக்க ஆரம்பித்தது. இதைப் பார்த்த தேனீக்கள் இந்த மரத்திலேயும் கூடுகட்ட வர, கோபப்பட்ட குரங்கு தேனீ



க்களை விரட்டி விட்டது.

ஆனால் ஆமை மட்டும் அந்தத் தேனீக்களைக் கூப் பிட்டு "காட்டில எத்தனையோ மரங்கள் இருக்க நாங்க நட்டு வைத்த மரத்துல ஏன் கூடு கட்ட வந்தீர்கள் என்று கேட்டது.

அதற்கு தேனீக்கள் நாங் கள் எல்லாம் ரொம்ப குட்டித் தேனீக்கள். பெரிய மரங்க ளில் கூடு கட்ட எங்களுக்கு பயமா இருக்கு. உங்கள் மரம்தான் எங்களுக்கு ஏற்ற படி உயரம் குறைவா இருக் கிறது என்று கூறின. இதைக் கேட்டு மனம் உருகிப் போன ஆமை, தன்னுடைய குரங்கு நண்பனைச் சமாதா னப்ப டுத்தி தங்களுடைய மரத் தில் தேனீக்களைக் கூடுகட்ட அனுமதித்தது. (தொடரும்)

மகா அலெக்சாண்டரின் வரலாறு

பிரமிக்க வைத்த போரஸ்

நீங்கள் ஒவ்வொரு வரும் யானைகளின் துதிக்கைகளையும் தந் தங்களையும் மட்டும் குறிவைத்துத் தாக்குங் கள். அவை அறுந்து கீழே விழவேண்டும். அவ்வப்போது தீப்ப ந்தங்களைக் கொளுத்தி வீசுங்கள். மிரண்டு ஓடுவதற்கு வசதியாக இரு க்கும் புறப்படுங்கள்.

களத்தில் இறங்கி னார்கள் மாசிடோனிய வீரர்கள். அலெக்சாண் டரின் ஆலோசனையை அமுல்படுத்தினார்கள். ஒவ்வொரு ஈட்டியும் யானைகளை மட்டுமே குறிவைத்தன.

கொஞ்சம் கொஞ்ச மாக யானைப்படை பலமிழந்தது. தந்தங் களும் துதிக்கைகளும் மண்ணோடு மண்ணா கப் புரளத் தொடங் கின. யானைப்படை துவண்டுவிட்டது.

வெற்றி வெற்றி.

யானைப்படையை முட க்கி விட்டோம். ஆர்ப்ப ரித்தார்கள் மாசிடோ னிய வீரர்கள். தேர்க ளும் நகரமுடியாத நிலை. யானைப்படை முன்னே சென்று தேங்கி விட் டதால் அவற்றைத் தாண்டி குதிரைப் படை யினராலும் முன்னேற முடியவில்லை.

கால்களும் கைகளும் வழுக்கியதால் தரையில் அழுத்தந்திருத்தமாக நின்றுகொண்டு அம்பு களைச் செலுத்த முடி யாமல் திணறினார்கள் புருஷோத்தமரின் வீர ர்கள்.

மழை புருஷோத்தம ருக்கு மிகப்பெரிய சோத னையாக அமைந்தது. அதிலும் வெற்றி யையே காவு வாங்கிவிடும் அளவுக்கு.

அலெக்சாண்டருக் கும் புருஷோத்தமருக்கு மான யுத்தம் இயற் கைக்கும் புருஷோத் தமருக்குமான யுத்த மாக உருவெடுத்தி ருந்தது. நடக்கும் அத் தனையும் அலெக்சா ண்டருக்குச் சாதகமாக மாறின.

தன்னுடைய வீரர் கள் செத்துமடிந்து கொண் டிருப்பது புருஷோத்த மரை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. அடுத் தடுத்து எப்படித் தாக் குதல் நடத்துவது என்றே சிந்தித்துக் கொண்டு இருந்தார்.

குதிரைகள் போனால் என்ன? யானைகள் போனால் என்ன? காலாட் படை இருக்கிறது அல் லவா. அவர்களை வைத்து வகுக்கப் போகிறேன் வியூகம். (தொடரும்)

உலகம் வீரர்களுடையது என்பது சத்தியமான வார்த்தை. "வீரனாக இரு. எப்போதும் அச்சமில்லை அச்சமில்லை என்று சொல்லிக் கொள். பிறருக்கும் அச்சம் மரணம், அச்சம் பாவம், அச்சம் நரகம், அச்சம் அதர்மம், அச்சம் தீயொழுக்கம்" என உரை. – விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

தமிழ் இனம் யாகம் வளர்க்க சரத் வீரசேகர தேவை

இந்து சமயத்தில் யாகம் என்பது பிரதான இடத்தைப் பெற்றுள்ளது.

யாகத்தின் பயன்கள் பற்றி வேதங்கள் எடுத்தியம்புகின்றன.

தவிர, யாகங்களின் வகைகள் பற்றிய விரிவாக்கங்களையும் வேதங்கள் விபரித்து நிற்கின்றன.

இதில் அசுவமேத யாகம் என்பது யாகங்களுக்கெல்லாம் முதன்மையானதென்பது வேத விற்பன்னர்களின் முடிவு.

எதுவாயினும் யாகத்தில் அக்னி, பசுநெய், வேதம் ஓதும் வேதியர், அவிப்பாகம் என நான்கு விடயங்கள் அவசியமாகின்றன.

இது யாகம் பற்றி அறியாதவர்களும் அதனை ஓரளவேனும் அறிய வேண்டும் என்பதற்கான சிறு குறிப்பு மட்டுமே.

இவை ஒருபுறமிருக்க, யாகம் என்பது இறைவனுக்கு அவிப்பாகத்தைச் சேர்ப்பிக்கின்ற வழிபாட்டு முறையாக இருந்தாலும் தமிழ் மொழியில் யாகம் என்பது ஒரு பெரும் இலக்கை அடைவதற்கான அர்ப்பணிப்பு, ஈகை, தியாகம் என்பவற்றின் உயர்கருத்தை சித்திரிப்பதற்கான சொல்லாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

அந்தவகையில் ஒரு யாகத்தை செய்வதற்குக் கார்ண கர்த்தா யாராக இருந்தாலும் நெய்விட்டு அக்னி வளர்க்கின்றவர்கள் இல்லையென்றால், யாகம் நின்று விடும்.

எனவே யாராயினும் விழித்திருந்து யாகத்தை வளர்க்க வேண்டும்.

இந்த வகையில் தமிழ் மக்களின் உரிமைக்கான யாகம் இன்று வளர்ந்து வருகிறது எனில், அதற்குக் காரணம் சிங்களப் பேரினவாதிகள் என்பதுதான் உண்மை.

சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களைச் சீண்டாமல் இருந்தால், தமிழர் தாயகத்தில் நில ஆக்கிரமிப்பை செய்யாமல் இருந்தால், தொல்லியல் ஆய்வு என்று கூறிக் கொண்டு தமிழர்களின் பூர்வீக இடங்களையெல்லாம் பௌத்த சிங்களவர்களுக்குரிய தென உரிமை கோராமல் விட்டிருந்தால் தமிழ் மக்கள் தங்கள் இனம் பற்றிச் சதா சிந்திக் கின்ற மனநிலையில் இருந்து விலகி இருக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கும்.

ஆனால் இன்றுவரை எம் தமிழினம் என்று எங்களை இமைப்பொழுதும் நினைக்க வைக்கின்றவர்கள் சிங்கள ஆட்சியாளர்களும் பௌத்த பிக்குகளும் பேரினவாதக் கட்சிகளும் எனப் பட்டியல்படுத்த முடியும்.

இதை நாம் கூறும்போது, எங்கள் யாக குண்டம் எப்போதும் அக்கினியாக இருப்பதற்கு மூலகாரணமாக இருப்பவர் என்று எவரையேனும் சுட்டிக்காட்ட முடியுமா? என்று நீங்கள் கேட்டால்; அதற்கான பதில் இப் போதைக்கு சரத் வீரசேகர என்பதாகவே இருக்கும்.

போக்குவரத்து வசதிகளின்றி காணப்படும் முல்லை. மாந்தை கிழக்கு சிறாட்டிக்குளம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிறாட்டிக்குளம் கிராமத்தின் பிரதான வீதி புனரமைக்கப்படாமை மற்றும் போக்குவரத்து வசதிகள் இன்மை காரணமாக பாடசாலை மாணவர்கள்,பொதுமக்கள் வரை பல சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மேற்படி கிராமமானது மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள மிகவும் பின்தங்கிய பகுதியாக காணப்படுகிறது.

இங்கு வசித்துவரும் சுமார் 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து வசதிகள் இன்றி பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதாவது அண்மையில் பெய்த மழையினால் ஒருவார காலம் போக்குவரத்து தடைப்பட்டிருந்து கிராமத்துக்கான போக்குவரத்து வசதிகள் இன்மை பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமை போன்ற பல வேறு காரணங்களால் கிராமத்திலுள்ள மக்கள் அன்றாடம் பெரும் சிரமங்களையும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பெரும்சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (5-4-315)

கொரோனாத் தொற்றாளர்களுக்காக தனியார் வாகனங்களை கோரத்தீர்மானம்

(கொழும்பு)

கொரோனா நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்காக தனியார் பிரிவிடமிருந்து வாகனங்களை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள அம்புலன்ஸ் வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லையென்பதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இதற்கு தேவையான நிதி, மாகாண சபைகளூடாக பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டதுடன் இதற்காக மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வாகனங்களை வழங்குவதற்கு எவரேனும் விருப்பம் கொண்டிருந்தால், தமது சுகாதார அதிகாரிகளுக்கு அது குறித்து அறிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (நி-4)

பிரிட்டன் தூதுவர் சுமந்திரன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹூல்டனுக்கும் த.தே. கூ. இன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 46 ஆவது கூட்டத்தொடர் உட்பட பல விடயங்கள் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டன. (நி-4)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

யாழ்.பிரதேசத்தில் புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, குரும்பசிட்டி, வாகையடி, ஈவினை, அச்செழு, மாசிவன், விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்ரெட், திண்ணை Organic பண்ணை, வியாபாரி மூலை, நாவலடி, இன்பருட்டி, திக்கம், பாரதிதாசன் சனசமூக நிலையம், முத்துமாரி அம்மன் கோவில், சுப்பர் மடம் மரின்வெல்த் ஹஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சி பிரதேசத்தில் பரந்தனிலிருந்து பூநகரி ஊடாக கௌதாரி முனை வரை, முட்கொம்பனிலிருந்து அரசபுரம் வரை, நெற்பிலவு, பள்ளிக்குடா, செம்மண்குன்று, ஞானிமடம், கறுக்காய்தீவு, 5V படைப் பிரிவு, பிரதேச செயலகம் பூநகரி, 66 வது படைப் பிரிவு பூநகரி, 66 வது படைப்பிரிவு 2 பூநகரி ஆகிய இடங் களிலும்

வவுனியா பிரதேசத்தில் சமணன்குளம் கிராமம் சின்னசிப் பிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

முன்கள சுற்றுலாத்துறை ஊழியர்களுக்கு தடுப்பூசி

(கொழும்பு)

சுற்றுலாத்துறையில் முன் வரிசையில் பணியாற்றுபவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 50 ஆயிரம் தடுப்பூசிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஹோட்டல்கள், சுற்றுலா வழிகாட்டிகள், சுற்றுலா சாரதிகளுக்கு தடுப்பூசிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதுவரை 2500 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

சீனா, ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து, உக்ரேய்ன் மற்றும் கசகஸ்தான் உள்ளிட்ட நாடுகளிலிருந்து இவர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் பெருமளவான சுற்றுலாப் பயணிகள் விசாவிற்கு விண்ணப்பித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-4)

சத்திய தரிசனம்

விடா முயற்சி அவசியம்



- கிடைப்பதற்கு அரிய மனிதப்பிறவி எடுத்திருக்கிறோம். அதனால், நம் வாழ்வின் நோக்கம் கடவுளை அறிவதாக இருக்கட்டும்.
- நல்ல சிந்தனைகளை கேட்டால் மட்டும் போதாது. அதை அன்றன்றே நடைமுறை படுத்த வேண்டும்.
- வாழ்வில் கஷ்ட நஷ்டங்களைத் தவிர்க்க முடியாது. அவற்றை மறந்து விடாமுயற்சியோடு உழைத்தால் பலன் நிச்சயம் கிடைக்கும்.
- தளராத நம்பிக்கை, மனத்தூய்மை, தொண்டு மனப்பான்மை இந்த மூன்றும் நம்மிடம் இருந்தால் தான் கடவுளின் அருளை நாம் பெற முடியும்.
- பொறாமை ஒரு நஞ்சு. மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டு ஒருபோதும் பொறாமைப்படுவது கூடாது.
- அளவான பேச்சு, ஒருவரிடம் தெய்வ பலத்தை அதிகரிக்கச் செய்யும். சமூகத்தில் நன்மதிப்பை உண்டாக்கும். நினைவாற்றலை மேம்படுத்தும்.
- கடவுளின் திருநாமத்தை எப்போதும் மறவாது இருங்கள். நாள் முழுக்க நாமஜபத்தில் ஈடுபடுங்கள்.

ஜெனிவா சவால்களை எதிர்கொள்ள பாகிஸ்தான் பிரதமருடனும் பேசுவோம்

(கொழும்பு)

இராஜதந்திர ரீதியில் தொடர்புகளைப் பேணும் போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் நட்பு நாடுகளுடன் அவதானம் செலுத்தப்படும். அவற்றில் தற்போது இம்மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் குறித்த விடயங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்படும்.

இலங்கை வரவுள்ள பாகிஸ்தான் பிரதமருடனான சந்திப்புக்களில் இவ்விடயம் குறித்து பேசப்படும் என்பது இரகசியமல்ல என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இணையவழியூடாக நடைபெற்றது.

இதன் போது, " பாகிஸ்தான் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். கனடா , ஜேர்மன், இங்கிலாந்து போன்ற நாடுகளின் தூதுவர்களுடன் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சந்திப்புக்களை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெஹலிய தெரிவிப்பு

இவை மனித உரிமை பேரவை தொடர்பான அரசாங்கத்தின் முன்னெடுப்புக்களா?" என்று கேட்ட போதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

தற்போது இராஜதந்திர தலைவர்களுடன் நாம் தொடர்ச்சியாக தொடர்புகளை பேணி வருகின்றோம். இதன் போது வெவ்வேறு பிரச்சினைகள் தொடர் பில் பேசப்படும். இவ்வாறு பேசப்படும் வெவ்வேறுபட்ட விடயங்களில் முக்கியத்துவ மளிக்கப்படுவது மனித உரிமை கள் பேரவை தொடர்பான தாகும். இது இரகசியமான தல்ல.

பொருளாதாரம் தொடர் பில் இருதரப்பு கலந்துரையா டல்கள் முன்னெடுக்கப்படும் அதேவேளை , 22 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் தொடர்பிலும் நிச்சயம் பேசப்படும்.

இது தொடர் பிலும் ஏனைய பல நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார். (நி-4)

ஊடகவியலாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கோரிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கொவிட்-19 தடுப்பு ஜனாதிபதி செயலணியில் வைத்து விடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கும் கொவிஷீல்ட் அஸ்ட்ரா ஜெனகா தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார். (நி-4)

திருமலையில் மீனவர்கள் வீதியை மறித்து போராட்டம்

(திருமலை)

திருகோணமலை கடற்கரை பகுதியில் சிறு மீன்பிடி படகுகளில் தூண்டில் மூலமாக மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

பாரிய படகுகள் மூலமாகவும் தடை செய்யப்பட்ட மீன் பிடி உபகரணங்கள் மூலமாக குறித்த பகுதியில் பலர் மீன்பிடியில் ஈடுபடுவதால் தாம் பாதிக்கப்படுவதாக தெரிவித்த மீனவர்கள் திருகோணமலை மணிக்கூண்டு கோபுரத்திற்கு அருகில் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு தமது பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுத்தரவேண்டும் என கோரிக்கை விடுத்ததோடு தீர்வுகள் எட்டப்படாவிடின் பாரிய போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவும் தாம் தயாராக இருப்பதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (நி-4)

தொற்றாளர்கள் எண்ணிக்கை தொடர்பில் அரசு பொய்யான தகவல்களை வெளியிடுகிறது

எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொவிட் தொடர்பில் அரசாங்கம் பொய்யான தரவுகளையே வெளிப்படுத்தி வருகின்றது. கொவிட்டில் மரணிப்பவர்களின் எண்ணிக்கை, சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை , குணமடைந்து வெளியேறுவோர்களின் எண்ணிக்கை என பொய்யான இலக்கங்களே தெரிவிக்கப்படுகின்றன.

இதன் மூலம் அரசாங்கம் எதனை எதிர்பார்க்கின்றது என எதிர்க்கட்சி வினவியது.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, எதிர்க்கட்சி உறுப்பினர் ஹேஷ விதானகே இடைக்கேள்வி ஒன்றை முன்வைத்து, கொவிட் கட்டுப்படுத்தல் ராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோ புள்ளேயிடம் வினவும் போது,

நாட்டில் தற்போது நாளாந்தம் கொவிட் தொற்றாளர்கள் சுமார் 800 பேர் வரை கண்டறியப்படுகின்றார்கள். அரசாங்கத்தின் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் தொற்றாளர்கள் கட்டாயமாக 14 நாட்கள் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இருக்கவேண்டும். அதேபோன்று நோய் அறிகுறி இருக்கும் தொற்றாளர்கள் 14 நாட்கள் இருக்கவேண்டும். சிலவேளைகளில் அதற்கும் அதிக நாட்கள் இருக்கவேண்டி ஏற்படலாம்.

அதன் பிரகாரம் நாளொன்றுக்கு 800 அடிப்படையில் 14 நாட்களுக்கு 11 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சிகிச்சை நிலையங்களில் இருக்கவேண்டும். ஆனால் தொலைக்காட்சிகளுக்கு முன்னால் வந்து அதிகாரிகள் தெரிவிக்கும்போது, தொற்றாளர்கள் 5 ஆயிரத்துக்குள்ளே இருப்பதாக எண்ணிக்கை ஒன்றை தெரிவித்து வருகின்றனர்.

அப்படியாயின் சாதாரண நோய் அறிகுறி இருப்பவர்களை 3, 4 நாட்களில் விடுவிக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றதா அவ்வாறு இல்லாவிட்டால் பொய் இலக்கங்களை தெரிவித்து மக்களை ஏமாற்றுகின்றார்களா எனக் கேட்டார்.

இதற்கு இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோ புள்ளே பதிலளிக்கையில்,

கொவிட்-19 தொற்றாளர்கள் மற்றும் மரணிப்பவர்களின் இலக்கங்கள் தொடர்பில் தெரிவிக்கப்படும் அனைத்தும் உண்மையானவை. பொய்த்தரவுகளை தெரிவிப்பதற்கு எந்த தேவையும் எமக்கில்லை.

ஒரு பக்கத்தால் தொற்றாளர்கள் உள்வாங்கும்போது மறுபக்கத்தால் குணமடைந்தோர் வெளியேறுகின்றனர்.

அதனால் உண்மையை மறைப்பதற்கு எமக்கு எந்தத்தேவையும் இல்லை.

எம்மால் வெளியிடப்படும் அனைத்து தரவுகள் தொடர்பாகவும் நாங்கள் பொறுப்பு வகிக்கின்றோம் எனத் தெரிவித்தார். (நி-4)

ஆயுதங்கள் இருப்பதாக தகவல் மட்டு.பாடசாலையில் தேடுதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலய வளாகத்தில் ஆயுதங்கள் இருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தின் அனுமதியுடன் பாடசாலை வளாகத்தினுள் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து இந்தத் தேடுதலை முன்னெடுத்தனர்.

வெல்லாவெளி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலய வளாகத்தினுள் வெல்லாவெளி பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

எனினும், இதன்போது எவ்விதமான ஆயுதங்களும் கண்டெடுக்கப்படாத நிலையில் தேடுதல் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. (நி-4)

மீசாலையில்...

பகுதியைச் சேர்ந்த 29 வயதான ராகுலன் என்ற இளைஞனே இவ்வாறு தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-30)

வடக்கில் 21...

ளமை நேற்று புதன்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 2 பேர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 776 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 21பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய 8 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் வங்கி ஊழியர்கள் ஐவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-18,316)

முல்லை. குருந்...

ஒத்த கற்களாலான கருவறை என்று கருதப்படும் கட்டட இடிபாடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

கொழும்பு தொல்லியல் திணைக்களத்தினரும் யாழ்ப்பாணத்தின் தொல்லியல் திணைக்களத்தினரும் இணைந்து குருந்தூர்மலையில் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அகழ்வு நடவடிக்கைகள் குறித்த ஒளிப்படங்களை தொல்லியல் திணைக்களம் தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிட்டிருந்தது. (ம-281)

வடக்கு, கிழக்கு...

அமைச்சர் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

97 சதவீதமான காணிகள் இதுவரையில் கையளிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய காணிகள் தேசிய பாதுகாப்பு கருதியே வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தனியார் காணிகள் இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய காணிகள் குறித்து கேள்வி எழுப்ப முடியாது. அவை பாதுகாப்புக்கு உட்பட்ட விடயமாகும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ம)

(மற்றொரு செய்தி உள்ளே)

5 பலி...

திப்படுத்தினார்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 375 ஆக அதிகரித்துள்ளது. (ம)

பொத்துவில்...

இயக்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளதாக வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் அபிலாசையை பெற்றுக் கொள்ள, நீதியை பெற்றுக்கொள்ள, அறத்தின் வழி உரிமையை பெற்றுக் கொள்ள அனைவரும் ஒன்றுபட வேண்டிய தேவை இன்றைய காலம். ஈழத்தமிழர்களாக மட்டுமல்லாமல் அனைத்து தமிழர்களும் ஒன்றுபட வேண்டிய தேவையிருந்தது.

அவசர அவசரமாக ஏற்பாடு செய்ததால் சில தவறுகள் நேர்ந்திருக்கலாம்.

இஸ்லாமிய மக்களின் ஆதரவு எமக்கு மிக அதிகளவாக இருந்தது. இஸ்லாமிய-தமிழ் உறவு மீளவும் புதுப்பிக்கும் வாய்ப் பேற்பட்டுள்ளது. இது மக்களின் போராட்டம். ஆரம்பத்தில் ஓரிரு நாட்கள்தான் நாம் ஒழுங்கமைத்தோம்.

மிகுதி எல்லாமே மக்கள்தான் செய்தார்கள். அவர்களின் எழுச்சியின் பின்னால் தான் நாம் சென்றோம். 2009ஆம் ஆண்டுக்கு பின்னர், மக்களின் பெரிய எழுச்சியாக இது இருக்கும். தமது உள்ளக்கிடக்கைகளை வெளிக்கொணரும் சந்தர்ப்பமாக இது இருந்தது

மிக குறுகிய காலத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டமாக இருந்தது. கடந்த 12 வருடங்கள் அடக்கிவைக்கப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்த கிடைத்த இந்த சந்தர்ப்பத்தில் பல்வேறு இடங்களில் பல சம்பவங்கள் நடந்தன. கடந்த 12 வருடங்களில் பல நிகழ்வுகளை நாம் ஒழுங்கமைத்திருந்தாலும், இதுபோன்ற கூட்டிணைவு இதுதான் முதல்முறை.

பல இடங்களிலும் தன்னிச்சையாக பல சம்பவங்கள் நடந்தன. மக்களின் உணர்வுடனான விடயம் இது. தனி நபரின் உணர்வின் விளைவுகளே பெரியவை. இதில் ஒரு சமூகத்தின், கிராமத்தின் உணர்வுடன் சம்பந்தப்பட்ட விடயம்.

இது தனிநபர்களின் போராட்டமல்ல. இதற்கு யாரும் உரிமை கோர முடியாது. இது மக்களின் எழுச்சி, மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ள போராட்டம். சில்லறை விடயங்களிற்காக அதை திசை மாற்ற முடியாது.

அதில் அணிதிரண்ட இளைஞர்களிற்கு சரியாக வழிகாட்ட வேண்டிய பொறுப்பு அரசியல் கட்சிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூகத்திற்கு உள்ளது என்றார். (ம)

ஜெனிவாவில்...

ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட வேண்டும் என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் வலியுறுத்தியிருக்கிறது.

எதிர்வரும் ஜக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான அறிக்கையினை இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்புடன் இணைந்து சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் வெளியிட்டிருக்கிறது.

திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் அவை தொடர்பில் விசாரணை செய்வதில் தோல்வியடைந்த கட்டமைப்புக்கள், தற்போது இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் (வன்முறைகள், தன்னிச்சையான கைது நடவடிக்கைகள், தடுத்துவைக்கப்பட்டுள்ளபோது இடம் பெறும் இறப்புக்கள்), வலிந்து காணாமலாக்கப்படல் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் மற்றும் சட்டத்தின் ஆட்சி, முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் மேற்படி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம)

விக்...

களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை தமிழ் மக்களே தெரிவு செய்து கொள்ளும் வகையிலான பொது வாக்கெடுப்பு ஒன்று சர்வதேச சமூகத்தினால் நடத்தப்படுவதற்கு, இந்தியா தலைமையேற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்ட கருத்து தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில்,

சி.வி.விக்னேஸ்வரன் இலங்கையின் கொழும்பில் பிறந்து 65 ஆண்டுகள் சிங்களவர்களுடன் வாழ்ந்துவிட்டு தற்போது வடக்கிற்கு சென்று சிங்களவர்களுக்கு வடக்கில் வாழ்வதற்கு உரிமை இல்லை எனக் கூறுகின்றார்.

இவ்வாறாக ஒற்றுமையின்மையை ஏற்படுத்தும் விக்னேஸ்வரன் போன்றோருக்கு எதிராக எதிர்காலத்தில் சட்டநடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

இலங்கையில்...

அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என்று அரசாங்கம் மீண்டும் அறிவித்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதாக அரசாங்கம் கடந்த பொதுத்தேர்தலின் போது உறுதியளித்ததாக சாணக்கியன் தெரிவித்த நிலையில் அரசியல் கைதிகள் என்று எவரும் நாட்டில் இல்லை என்று அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

எனினும் வழக்கு தாக்கல் செய்யப்படாமல் சிலர் சிறைகளில் இருப்பதாக சப்ரி தெரிவித்துள்ளார்.

இவர்களின் வழக்குகளை துரிதப்படுத்த சட்டமா அதிபருடனும் பிரதம நீதியரசருடனும் பேச்சுக்கள் நடத்தப்படுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம)

இலங்கையில் நேற்றும்...

றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 72 ஆயிரத்து 166 ஆக அதிகரித்துள்ளது. (ம)







வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும் சிறியரக உணவகத்திற்கு மலேசியன் முறைப்படி உணவு தயாரிப்பதற்கு பழகி வேலை செய்யக்கூடிய 25 வயதிற்கு உட்பட்ட ஆண் வேலையாட்கள் தேவை. (C-1407)

077 393 0127

Architectural CAD Centre[Jaffna-Vavuniya-Colombo]
[Personal-Group-Visiting Classes]
(1195)
2D-Drawing 3D-Modeling
Auto CAD
Lecturer By Mr K.N Mugunthan(D/A)
Cert in Auto CAD(2D Drawing&3D Modeling)
University of Peratheniya.
Cert in Auto CAD(Advance 3D-Modeling)
University of Moratuwa.
Cert in Auto CAD(2D Drawing&3D Modeling)
Open University of Sri Lanka.
Cert in Auto CAD(2D &3D)(1stClass)
University of Colombo.
Link:
077-5116320
071-8617972
[Civil & Mechanical]

வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் சரவணபவன் பான்சி கவுஸ் மொத்த, சில்லறை விற்பனை நிலையத்திற்கு ஆண்கள் தேவை. (5622)

இல. 26/1,
ஜ்ம்மா பள்ளிவாசல் லேன்,
யாழ்ப்பாணம்.

077 468 3354

காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1408)

077 436 6704, 077 179 1963

வேலை வாய்ப்பு

- வாகன சுத்திகரிப்பாளர் (சேவிஸ்)
- மோட்டார் சைக்கிள் திருத்துநர் (மெக்கானிக்)
- உதிரிப்பாக விற்பனையாளர்
- எழுதுவினைஞர் (பெண்கள்) (C-1409)

077 310 7549
021 492 7337, 021 222 3111

பாராளுமன்றம் வரும் ஜனாதிபதி கோட்டாபய

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இன்று பாராளுமன்றத்திற்கு வருகை தரவுள் ளார்.

இதனால் காலை 10 மணிக்குள் அரச தரப்பு உறுப்பினர்கள் சபைக்கு பிரசன்ன மாகி விட வேண்டுமென ஆளுங்கட்சி கொரடா அலுவலகம் உறுப்பினர்களிற்கு அறிவுறுத்தியுள்ளது. (ம)

வீடு வாடகைக்குத் தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் மூன்று பேர் கொண்ட குடும்பத்தினருக்கு யாழ். பல்கலைக்கழகம், யாழ். நகரத்தை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

077 358 0935

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (5104)

தொடர்பு: றாஜ் - 077 679 6623

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புத்தூர்
- கோப்பாய்
- புதுக்குடியிருப்பு
- கொடிகாமம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1374)

0768226240 DHL

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org

(5444)

021 222 8093 புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.

FRENCH LANGUAGE CENTRE

FALC

Embassy.ஆல் அங்கீகரிக்கப்பட்ட
French International Diploma
(DELF A1, A2, B1, B2)
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Mr. V. Jegan (Trained in France) (C-1363)

19, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779789456/ 021 221 7781

23/2, சோமசுந்தரம் அவெனியு, கண்டிக்குளி. 0779789456/ 0212219497
கச்சேரி Fuel Station அண்மையில்

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1, B1, Grammar & Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
(C-1357)
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
075 3305500

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 06 10 1928 — உதிர்வு 13 01 2021

அமரர்

திரு. கதிர்காமு துரைராசா

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - உடையார்)

மலர்வு 16 11 1935 — உதிர்வு 05 01 2021

அமரர்

திருமதி மீனாட்சிசுந்தரம் துரைராசா

கடந்த 05.01.2021, 13.01.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் விருட்சங்கள் அமரர் கதிர்காமு துரைராசா, அமரர் திருமதி மீனாட்சிசுந்தரம் துரைராசா ஆகியோரின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.02.2021) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும்.

மேலும் எமது குடும்பத்தின் தீபங்கள் அணைந்த செய்தியறிந்து நேரில் வருகைதந்து ஆறுதல் தெரிவித்தோர், சகல வழிகளிலும் உதவி புரிந்தோர், இறுதிச் சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும், தொலைபேசி, முகநூல் வாயிலாக தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-1402)

குறிப்பு : தயவுசெய்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

தகவல் :
உடையார் குடும்பத்தினர்.

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.